# சிறுவர் உரிமைகள் இலகுவான முறையில்...

ஆக்கியோன்
வழக்கறிஞர் சாறுக்க சமரசேகர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமைகள் இலகுவான முறையில்...

2006ஆம் ஆண்டு சிறுவர் வருடம் சார்பாக நீதிநியாயத்தைச் சமமாக அணுகும் கருத்திட்டத்தினால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட கைந்நூலாகும்

ஆக்கியோன்
வழக்கறிஞர் சாறுக்க சமரசேகர
கருத்திட்ட உத்தியோகத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் உரிமைகள் இலகுவான முறையில்

© சாறுக்க சமரசேகர

ISBN : 955-1258 - 05-03

முதலாவது பதிப்பு 2008 - ஜனவரி

வெளியீடு :-
நீதி நியாயத்தைச் சமமாக அணுகும்
கருத்திட்டம்
இல : 310, காலி வீதி,
கொழும்பு - 03.
தொலைபேசி : 011 2375287, 011 2375546
தொலைநகல் : 011 2375288

**அச்சுப் பதிவு**
சரசவி பிரின்டஸ்
இல.243/1,
தலவதுஷேன்பிடிய
மாகொல வீதி,
கிரிபத்கொட.
தொலைபேசி : 011 5625931,
077 3226739



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி நியாயத்தைச் சமமாக அணுகும் கருத்திட்டம் என்பது ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் அனுசரணையுடன் செயற்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டமாகும். இந்த வேலைத்திட்டத்தின் அடிப்படை நோகக்ம் யாதெனில், மனித உரிமைகள் மீது அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைகள் மூலம் சிறப்புரிமைகளைப் பெற்றிராத மக்களுடைய நீதி நியாயங்களுக்கான அணுகுமுறைகளை மேலும் மேம்படுத்தலாகும்.

கருத்திட்டத்தின் நோக்கங்களை அடையும் பொருட்டாக தேசிய மட்டத்தைப்போல் பிரதேச மட்டத்திலும் பலவிதமான வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. “துன்பத்திற்கு உள்ளாகக் கூடிய பெண்கள் மற்றும் சிறுவர்களுக்காகவுள்ள சட்டம் சார்ந்த உருவமைப்பைப் பலப்டுத்தல்” கருத்திட்டத்தின் நோக்கமாக இருப்பதுடன் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும்.

2006 ஆம் ஆண்டு “சர்வதேச சிறுவர் ஆண்டாக” இலங்கை அரசினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சிறுவர் உரிமைகள் பற்றிய இந்தச் சிறிய புத்தகம், அதற்குச் சமாந்தரமான முறையில் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

தங்கள் வசம் உள்ள உரிமைகள் போன்று கடமைகளும் சிறந்த முறையில் அறிந்து கொண்ட பொறுப்புள்ள பிரசைகளைத் தோற்றுவித்தல் இந்தச் சிறிய கைந்நூலை வெளிக்கொணருவதற்கான அடிப்படை நோக்கங்களாக இருப்பதுடன் இந்தக் கருமங்களில் எங்களுக்கு எல்லாவிதத்திலும் ஒத்துழைப்பைத் தந்துதவிய சகலருக்கும் எங்களுடைய கௌரவமான நன்றி உரித்தாகுக.

ஆசிரியர்

4 ஆம் மாடி
இல: 310, காலி வீதி
கொழும்பு - 03.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் நோக்கம் ..............

மனித உரிமைகள் என்ற அடிப்படை மீது தீர்வு காணும் முறையைப் பாவிப்பதன் மூலம் நன்மை கிட்டாத நிலையில் உள்ளவர்கள் நீதி நியாயத்தை அடையும் பொருட்டு அணுகுவதற்குள்ள இயலும் தன்மையை மேம்படுத்தல் மற்றும் அவர்களுக்குத் தேவையான சட்டம் சார்ந்த அதிகாரங்களை அவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தல் பலனளிக்கும் சட்ட சேவைகளைப் பெறும் நபர்களுடைய எண்ணிக்கையையும் மாற்றுக் கருத்துக்களையுடையவர்களனின் எண்ணிக்கையையும் அதிகரித்தல். நீதி நியாயத்தைப் பெறும் முறைக்கு உட்பிரவேசிப்பதற்குள்ள தடைகளைக் குறைத்தல், பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளும் மாற்றுவழிகளில் சேவைகளைப் பெறும் நபர்களுடைய எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் மாற்றுக் கருத்துக்களையுடையவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் மனித உரிமைகளை மிகவும் சிறந்த முறையில் மேம்படுத்தல் மற்றும் பலனளிக்கும் விதத்தில் பாதுகாப்பதுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා කටයුතු සහ ජාතික ඒකාබද්ධතා අමාත්‍යාංශය
அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு
**Ministry of Constitutional Affairs and National Integration**

310, ගාලු පාර, කොළඹ 03 / තැ.පෙ. 1566, කොළඹ
310, காலி, கொழும்பு 03 / த பெ, 1566 சொழும்ப
310, Galle Road, Colombo 03 / P.O. Box 1566, Colombo

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. | ඔබේ අංකය / உமது இல / Your No. | දිනය / திகதி / Date: 2006.01.01 |

## கருத்திட்டப் பணிப்பாளரின் செய்தி

இலங்கையில் சிறுவர் உரிமைகள் பற்றிய சட்டம் தொடர்பாக, பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நோக்கத்துடன் இப்படியான ஒரு புத்தகத்தைத் தயாரித்தல், நீதி நியாயத்தைச் சமமாக அணுகும் கருத்திட்டத்தின் எதிர்ப்பார்ப்பாக இருந்தது. அந்த சட்டம் பற்றி பொதுமக்களினதும் விசேடமாக பாடசாலைச் சிறார்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டல் காலத்திற்கு உசிதமானதென்பது எனது அபிப்பிராயமாகும்.

இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் சிறுவர் உரிமைகள் மிகவும் அதிகமாக மீறப்படும் சந்தர்ப்பங்களில் பொதுமக்களுக்கு இந்த விடயங்கள் தொடர்பான விளக்கம் இந்த புத்தகத்தின் மூலமாகப் பெற்றுக்கொள்ளமுடியும்.

தமிழ் மொழியில் சட்டப் புத்தகங்களின் வெளியீடு குறைந்த மட்டத்திலுள்ள இச் சந்தர்ப்பத்தில் வழக்கறிஞர் திரு. சாறுக்க சமரசேகர அவர்களின் இந்த முயற்சியை மிகவும் பெரிதாகப் பாராட்டப்படக்கூடிய ஒரு காரியமாகும்.

இந்த வேலைகளில் வழக்கறிஞர் திரு. சாறுக்க சமரசேகர அவர்களுக்கு எனது நன்றியைப் பாராட்டுவதுடன் மேலும் இப்படியான விலைமதிப்புள்ள புத்தகங்களைத் தயாரிப்பதற்கு முடியும் எனப் பிராத்திக்கின்றேன்.

எம். எஸ். விக்கிரமசிங்க
கருத்திட்டப் பணிப்பாளர்
நீதி நியாயத்தைச் சமமாக அணுகும் கருத்திட்டம்
செயலாளர்
அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு

දුරකථන / தொலைபேசி இல / Telephones :

| | |
|---|---|
| ඇමති / அமைச்சர் / Minister | 2375377 |
| ලේකම් / செயலாளர் / Secretary | 2375385 |
| අති. ලේකම් / மே. செயலாளர் / Add. Sec. | 2375393 |
| සහා.ක.ලේ. / சி.உ. செயலாளர் / S.A.S. | 2375386 |
| ප්‍රධාන කාර්යාලය / பிரதான காரியாலயம் / General Office | 2375178, 2375179, 2375180 |
| ෆැක්ස් / தொலைநகல் / Fax | 2375378 |
| ෆැක්ස් / தொலைநகல் / Fax | 2375378 |
| ෆැක්ස් / தொலைநகல் / Fax | 2375378 |
| ෆැක්ස් / தொலைநகல் / Fax | 2375379 |
| ෆැක්ස් / தொலைநகல் / Fax | 2375378 |
| වෙබ් අඩවිය / வலைகட்டப்படம் / Web Site | WW.constitution.gov.lk |
| විද්‍යුත් තැපැල / மின்னஞ்சல் / E-mail | Consas @ Sltnet.lk |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EQUAL ACCESS TO JUSTICE PROJECT

MINISTRY OF CONSTITUTIONAL AFFAIRS & NATIONAL INTEGRATION
UNITED NATIONS DEVELOPMENT PROGRAMME

## தேசிய கருத்திட்ட இணைப்பாளரின் செய்தி

ஒக்டோபர் 1 ஆம் திகதி உலக சிறுவர் தினமாக ஆக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பினால் உலக சிறுவர் தினமாக ஒரு நாளைப் பெயரிடுதல் சிறுவர்களுக்கு உரிமையாயுள்ள விசேட தினத்தை நன்றாக பிரதிபலிக்கிறது. சிறுவர் செல்வத்தை பாதுகாத்தல் சகலரினதும் பொறுப்பு என்பதை நாம் நன்றாக விளங்கிக் கொள்ளவேண்டும்.

சிறுவர் உரிமைகள் பற்றிய உடன்படிக்கையில் சிறுவர் உரிமைகள் உறுதி செய்யப்பட்டிருந்த போதிலும் சிறுவர் உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளன. சிறுவர்களை வேலைக்காரர்களாக சேவையில் ஈடுபடுத்தல், சிறுவர்களை விற்றல், மற்றும் கடத்திச் செல்லல் போன்ற சிறுவர் துஷ்பிரயோகச் செயற்பாடுகள் எங்கள் நாட்டில் நடைபெறுகிறது என்பது இரகசியமல்ல.

ஆகவே, சிறுவர் உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பலன்தரும் வகையில் பாதுகாத்தலில் கவனம் செலுத்தப்படவேண்டும். நவீன சமுதாயத்தில் போட்டியான மனநிலை, பணத்திற்கு பின்பு துரத்திச் செல்லுதல் சமூகத்தை வெறுக்கும் மனோபாவம் மாற்றமடைதல் போன்ற காரணங்களை ஏதுக்களாகக் கொண்டுள்ள உரிமைகளுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. ஆகவே சிறுவர் உரிமைகள் பற்றி வலியுறுத்தல் மற்றும் அது தொடர்பாக விழிப்புணர்வூட்டல் இந்த மாதிரியான யுகத்தில் அவசியமானதாக இருக்கிறது.

ஆகவே, நீதிநியாயத்தைச் சமமாக அணுகும் இக்கருத்திட்டத்தின்கீழ் "சிறுவர் உரிமைகள் இலகுவாக" எனும் தலைப்பில் அச்சிடப்பட்டு இலவசமாக வினியோகிக்கப்படும் இந்த வெளியீடு வயதுவந்தவர்களினதும் சிறுவர்களினதும் அறிவை ஊட்டி வளர்ப்பதற்கு உதவியாய் இருக்கும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

Wickramasinghe

..........................................................................

விவேகா சிறிவர்தன டி சில்வா.
தேசியக் கருத்திட்ட இணைப்பாளர்
நீதி நியாயத்தைச் சமமாக அணுகும் கருத்திட்டம்
திகதி : 2006-01-01

No: 310, 4th Floor, Galle Road, Colombo 3, Sri Lanka.
Telephone: 94 (011) 2375287/ 94(011) 2375546 Fax : 94(011) 2375288



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| அறிமுகம் | 01 |
| சர்வதேச சட்ட அமைப்பு | 01 |
| இலங்கையின் சட்டவமைப்பினுள் சிறுவர் உரிமைகள் | 02 |
| 1. 1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் | 04 |
| 2. 1998 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க நீதிமன்ற அமைப்பு (திருத்தச்) சட்டம் | 05 |
| 3. 1995 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவை (திருத்தச்) சட்டம் | 05 |
| 4. 1998 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் | 06 |
| 5. 1995 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம் | 07 |
| 6. 2005 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க விலைமாதர் தொழிலுக்காகப் பெண்களையும் சிறுவர்களையும் ஈடுபடுத்தல் பற்றிய உடன்பாட்டுச் சட்டம் | 09 |
| 7. 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இல்லத்து வன்முறைகளை தடுக்கும் சட்டம் | 11 |
| 8. 2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டம் | 18 |
| சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் குற்றங்களைத்தடுத்தல் தடுத்தல் | 22 |
| கடமைகளைச் செய்வோம் உரிமைகளைப் பாதுகாப்போம் | 27 |
| முக்கிய விடயங்கள் | 28 |
| இணைப்பு (01) ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய உடன்படிக்கை (CRC) | 30 |
| இணைப்பு (02) 1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்சட்டம்) (தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகள் மாத்திரம்) | 42 |
| இணைப்பு (03) 1998 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் | 53 |
| இணைப்பு (04) கருத்திட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் | 59 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006 ஆம் ஆண்டு "தேசிய சிறுவர் வருடம்" ஆக வெளிப்படுத்தும் உத்தியோக வைபவம் 2006 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

அந்த வைபவத்தில் வெளிக்கொணரப்பட்ட தேசிய சிறுவர் உடன்படிக்கை கீழே காண்பிக்கப்படுகிறது.

**தேசிய சிறுவர் தின உடன்படிக்கை**

இந்தப் பெரிய உலகத்திற்கு மாத்திரம் சொந்தமாயுள்ள சிறுவாகளின் உலகம் நட்பினாலும் முழு இதயத்தினாலும் ஆகிய அழகிய இல்லம் என அடைந்துள்ள மிகவும் விசேடமான பொறுப்பக்களை நிறைவேற்றும் பொருட்டாக எங்களுடைய அர்ப்பணிப்பைச் செய்யும் ஆரம்ப முத்திரையை இன்றைய தினத்தில் பதித்துக் கொள்வோம்.

தங்களுடைய உலகத்தை எப்படி வர்ணிக்கப்பட வேண்டும் என்று சொல்வதற்கு சிறுவர்களுக்கு உள்ள உரிமைகளுக்கு கௌரவத்தை முதலாகக் கொண்டு அதனைப்பெறுவதற்கு நாம் எல்லோரும் ஒன்றுபட வேண்டியதாக இருக்கிறது.

எங்கள் சிறுவர்களுக்கு சௌக்கியமான வாழ்வு, பாதுகாப்பான சூழல் மற்றும் பலன்தரக்கூடிய கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்கான தேவைப்பாடு, நேர்மையை முதலாகக் கொண்டு மற்றைய எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி வைப்பதினால் மாத்திரமே புதிய இலங்கைக்கான மிகச்சிறந்த தேசிய எதிர்பார்ப்புகள் யதார்த்தமாக வெளிவரும்.

இனி, இலங்கைப் பிரஜைகளாகிய சிறுவர்களுடைய நன்மை அரசாங்கத்தின் அடிப்படை பொறுப்பு ஆகக் கருதும் புதிய வழியின் ஆரம்பத்தை நன்றாக உண்டாக்கும் இந்த வரலாற்று நேரத்தில் சிறுவர்களுக்கு உசிதமான சிறுவர்களின் பொருட்டாக உலகத்தைக் கட்டியெழுப்புவதற்கு இதயத்தின் ஆழமான அடித்தளத்திலிருந்து அர்ப்பணிப்புச் செய்வோம் என்று சபதம் செய்துகொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமைகள் இலகுவான முறையில் ...

## அறிமுகம்

அநாதியான காலத்திலிருந்து இலங்கை மேம்பட்ட சக்தியுடனான ஒரு அமைப்பாகவும், நல்ல விழுமியங்களைக் கொண்ட சமூகத்தை உள்ளடக்கியதாக இருந்தது. எப்படியிருந்தபோதிலும், ஆக்கிரமிக்கப்பட்ட வெளிநாட்டுச் சக்திகள் மற்றும் பல்வேறு சாதகங்களினால் ஏற்பட்ட விழுமியங்களின் வீழ்ச்சியினுள் இன்றுவரை சிறுவர்களின் நல்வாழ்வுக்கு பெற்றோர்கள் உட்பட சகல சமூகத்திற்கும் பாரதூரமான பிரச்சினையாக உள்ளது. இப்படியான இடர்கள் பலவற்றிலிருந்து சிறுவர்களை பாதுகாப்பதற்கு தற்போது நிலவும் சட்டம் சார்ந்த கோட்பாடுகளைச் சீர்தூக்கிப் பார்ப்பது இந்தப் புத்தகத்தின் நோக்கமாகும்.

## சர்வதேச சட்டவமைப்பிற்குள் சிறுவர் உரிமைகள்

அபிவிருத்தியடைந்துவரும் பருவம் சிறுவர்களின் இளமைப் பராயத்தை சர்வதேச மட்டில் ஏற்றுக் கொள்வதற்கும், சிறுவர்களுக்குச் சொந்தமான மனித உரிமைகள் பற்றிய சட்டம் சார்ந்த கோட்பாடுகளைத் தயாரிப்பதை நோக்கமாகக் கொண்டு 1989 ஆம் வருடத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் சிறுவர் உரிமைகள் பற்றிய உடன்படிக்கை (The Convention on the Rights of the Child.) ஏற்றுக் கொள்ளப்பட்டது.

உடன்படிக்கையில் 54 பிரிவுகள் இருப்பதுடன் முதல் 42 பிரிவுகளின் மூலம் சிறுவர் பற்றிய வரைவிலக்கணம், சிறுவர்களுடைய உரிமைகள், சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக பெற்றோர்கள் உட்பட பராயமடைந்தவர்களுக்கு உள்ள பொறுப்புக்கள் விபரிக்கப்பட்டுள்ளது. மிகுதியான 12 பிரிவுகள் மூலம் உடன்படிக்கைக்கு கையொப்பமிட்டிருக்கும் அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படவேண்டிய விதங்கள் காட்டப்பட்டு உள்ளது.

உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளைச் சிறுவர்களுக்கும் பெற்றுக்கொடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் கட்டுப்பட்டு இருப்பதுடன் அதன் பிரகாரம் சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர்களின் நலன்புரி சார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு புதிதாகச் சட்டங்களை தயாரிப்பதற்கும் தற்போது நிலவும் சட்டங்களைத் திருத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கையெடுக்கவேண்டும். இப்படி அரசாங்கத்தினால் உறுதிப்படுத்தப்படவேண்டிய உரிமைகளுள் முக்கியமானவை :

* வாழ்க்கைக்கு, வாழ்க்கையை நடாத்திச் செல்வதற்கும் அபிவிருத்திக்கு உள்ள உரிமைகள்
* பெற்றோர் பாதுகாப்பைப் பெறுவதற்குள்ள உரிமைகள்
* எண்ணங்களை வெளிப்படுத்தும் உரிமைகள்
* நினைப்பதற்கு மனச்சாட்சிக்கு மற்றும் சமயத்தை அனுஷ்டிப்பதற்குள்ள உரிமைகள்
* சுகாதாரத்தைப் பேணுவதற்குள்ள உரிமைகள்
* கல்வி கற்பதற்குள்ள உரிமைகள்
* நேரத்தை ஓய்வாகக் கழிப்பதற்குள்ள உரிமைகள்
* பொருளாதாரம் மற்றும் பாலியல் சுரண்டல்களிலிருந்து பாதுகாக்கும் சுதந்திரம்
* நியாயமான நீதிமன்ற வழக்கின் மூலம் நீதி நியாயத்தை அடைவதற்குள்ள உரிமைகள்

☞ (சிறுவர் உரிமைகள் முழுவதையும் பற்றிய உடன்படிக்கைக்கு1 ஆம் இணைப்பை பார்க்கவும்)

## இலங்கையின் சட்டவமைப்பினுள் சிறுவர் உரிமைகள்

சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பான சட்டதிட்டங்களை இயற்றுதல் அடிமைப்பட்டிருந்த அன்றைய யுகத்திலிருந்தே இலங்கையில் காணக்கூடியதாக இருக்கிறது. 1883 ல் முதல்முறையாக கோவையாக்கப்பட்ட தண்டனைச் சட்டக் கோவை (Penal Code) மூலம் சிறுவர்களின் பாதுகாப்புத் தன்மைக்கான பழமைவாய்ந்த சட்டங்களின் ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தண்டனைச் சட்டக்கோவையின் 75 மற்றும் 76 ஆம் பிரிவுகளின் பிரகாரம் 8 வயதிற்கு குறைந்த பிள்ளையினால் புரியப்படும் ஏதாவதொரு செயல் அல்லது போதியளவாக வளர்ச்சியடைந்த புத்தியற்ற 12 வயதிற்கு குறைவான ஒரு பிள்ளையினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியப்படுகின்ற ஏதாவதொரு செயல் சட்டத்தின் பிரகாரம் ஒரு குற்றம் எனக் கருதப்படலாகாது.

அப்படியே அந்தக் கோவைமயின் பிரகாரம் 12 வயதிற்கு குறைந்த ஒரு பிள்ளை பெற்றோர்களினால் அல்லது பாதுகாவலரொருவரினால் கைவிடப்படல் தண்டனையைப் பெறக்கூடிய ஒரு குற்றமாகும்.

சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக மேலும் ஒரு முக்கிய சட்டம் யாதெனில், 1939 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சிறுவர்கள் மற்றும் இளம் பராயத்தினர் பற்றிய கட்டளைச் சட்டமாகும். (Children and Young Persons Ordinance No. 48 of 1939) சிறுவர் உரிமைகள் பற்றிய மிகவும் முக்கியமானது. இன்றும் அதிகமாகப் பாவிக்கப்படும் கட்டளைச் சட்டமாக இதனை அறிமுகஞ் செய்யமுடியும். இந்தக் கட்டளைச் சட்டம் "சயிபோ", (CYPO) என சுருக்கப்பெயரினால் அழைக்கப்படுகிறது.

முறையற்ற விதத்தில் உழைப்பைப் பெறுவதைத் தடுப்பதற்கான முயற்சியின் முக்கிய திருப்புமுனையாக இருப்பது 1956 ஆம் ஆண்டு 47 ஆம் இலக்கம் கொண்ட பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை வேலையில் ஈடுபடுத்தும் சட்டமாகும். (Employment of women, Young Persons and Children Act No 47 of 1956) இச் சட்டத்தின் பிரகாரம் யாராவதொருவரினால் 14 வயதிற்குக் குறைந்த ஒரு சிறுவனை வேலையில் ஈடுபடுத்துதல் தண்டனை பெறக்கூடிய ஒரு குற்றமாகும். இந்தச் சட்டத்திற்கு மிகவும் முக்கியமான திருத்தங்கள் பல 2003 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கம் கொண்ட பாராளுமன்றச் சட்டத்தினால் அறிமுகஞ்செய்யப்பட்டது.

எப்படியிருந்தபோதிலும் தற்காலத்தில் பாரதூரமான சமூகத்தொல்லையாய் உள்ள சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தவிர்ப்பதற்கு தற்பொழுது நடைமுறையில் இருக்கும் சட்டம் சார்ந்த கோவைகள் எதுவுமே போதியளவினதாக இல்லை. ஆகவே, சிறுவர் தொடர்பாக அனுமதிக்கப்பட்ட முக்கியமான அண்மைக்கால 8 சட்டங்கள் பற்றிய எமது அவதானத்தை ஈர்க்கவேண்டியுள்ளதாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01. 1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கம் கொண்ட தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம

## Penal code (Amendmend) Act, No 22 of 1995

இந்தச் சட்டத்தின் விசேடத் தன்மை யாதெனில் மற்றைய சட்டங்களைப் போலல்லாது சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய குற்றங்கள் தொடர்பாக விதிக்கக்கூடிய ஆகக் கூடிய தண்டனை மாத்திரமின்றி குறைந்த தண்டனையையும் விதிக்கக்கூடியதாகும்.

இந்தச் சட்டத்தின் மூலம் குற்றவியற் குற்றங்களாக வரைவிலக்கணம் கூறக்கூடிய விடயங்களாவன.

* சிறுவர்களை குரூரமான முறையில் வதை இம்சைகளுக்கு உட்படுத்துதல்
* சிறுவர்களிடமிருந்து முறையற்ற பாலியல் தொடர்பான பிரயோசனம் அடைதல்
* பாலியல் துஷ்பிரயோகங்களுக்காக சிறுவர்களை வழங்குதல்
* ஒழுக்கமற்ற அல்லது ஒழுக்கம் குறைந்த காட்சிகளுக்கு அல்லது வெளியீடுகளுக்கு சிறுவர்களை ஈடுபடுத்துதல் அல்லது அதற்காக ஒத்தாசை வழங்குதல்
* அவ்விதமான வெளியீடுகளை தன்வசம் வைத்திருத்தல், விற்பனை செய்தல், அவற்றை வினியோகித்தல் அல்லது அதற்கு உடந்தையாய் இருத்தல்.

☞ (1995 ஆம் ஆண்டின் 22 ம் இலக்க சட்டத்தில் சிறுவர் உரிமைகளுக்கு ஏற்புடைய பிரிவுகளுக்காக 2 ஆம் இணைப்பைப் பார்க்கவும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. 1998 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கம் கொண்ட நீதிமன்ற ஒழுங்கமைப்பு (திருத்தச்) சட்டம்

## Judicature (Amendment) Act, No 27 of 1998

இந்தச் சட்டத்தின் சட்டவிதிகளுக்குட்பட்டு பெண்களைக் கற்பழித்தல் அல்லது 18 வயதுக்குக் குறைந்த ஒரு பெண்ணைக் கற்பழித்தல் தொடர்பான வழக்கு நடவடிக்கையில் "சுருக்க முறையான நடவடிக்கைகள்" (Non Summary Proceeding) என்ற தேவைகள் நீக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் சிறுவர்களுக்கு துன்பம் விளைவித்தல் போன்ற வழக்குகளை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கும் துன்பத்திற்கு உள்ளான சிறுவர்களுக்கு மீண்டும் மீண்டும் தன்னுடைய சாட்சியத்தைச் சமர்ப்பிப்பதற்கும் கஷ்டமான அனுபவங்களைக் குறைப்பதற்கும் இயலுமானதாக இருக்கின்றது.

## 03. 1998 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவை (திருத்தச்) சட்டம்

## Code of Criminal Procedure (Amendment) Act, No 28 of 1998

இந்தச் சட்டத்தினால் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான வழக்கை விசாரணை செய்வதற்காக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அதிக அதிகாரங்கள் கையளிக்கப்பட்டு உள்ளது. குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவையின் பிரகாரம் பிடியாணை இன்றி (Warrant of arrest) விளக்கமறியலில் வைப்பதற்கு உள்ளாகும் நபரொருவரை தடுத்து வைத்திருக்கும் ஆகக்கூடிய கால எல்லை 24 மணித்தியாலங்கள் ஆகும். எப்படியிருந்த போதிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக விளக்கமறியலில் வைப்பதற்கு உள்ளாகும் நபரொருவரை 5 நாட்களுக்கு தடுத்துவைப்பதாயிருப்பின் பொலிஸ் அதிகாரியின் பதவிக்கு குறையாத பொலிஸ் உத்தியோகத்தரினால் நீதிவான் முன்னிலையில் ஒரு உறுதிச் சான்றிதழை தாக்கல் செய்யமுடியும்.

அவ்விதமே துஷ்பிரயோகங்களுக்கு உட்பட்ட சிறுவர்கள் வழக்கு விசாரணை நடைபெறும்பொழுது பாதுகாப்பாக ஓரிடத்தில் தடுத்து வைப்பதற்கும் இந்தத் திருத்தத்தினால் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திருத்தத்திற்கு முன்பு, துஷ்பிரயோகத்திற்குட்பட்ட சிறுவனைத் தடுத்து வைப்பதற்காக விளக்கமறியலில் வைப்பதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடியாணையையும் ஈடுபடுத்திய சந்தர்ப்பங்கள் பலவற்றைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. அதன்மூலம் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட சிறுவன் "பிடியாணைக்குட்பட்டவர்" என்றும் சமூகத்தின் வெறுப்புகளுக்கும் உள்ளாக்கப்பட்டார்.

## 04. 1998 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச் சட்டம்)

## Penal code (Amendment) Act, No 29 of 1998

இந்தத் திருத்தத்தின் மூலமும் சிறுவர் உரிமைகள் தொடர்பான முக்கியமான சட்டம் சார்ந்த பல ஏற்பாடுகள் அறிமுகம் செய்யபட்டுள்ளது. அவையாவன :-

1. படம் எடுத்தல் அல்லது புகைப்படம் அச்சிடுதல் வெளியிடுபவர்களுக்குக் கிடைக்கும் சிறுவர் தொடர்பான ஆபாசமான அல்லது ஒழுக்கம் கெட்ட விடயங்கள் தொடர்பாக பொலிசுக்கு அறிவித்தல் கொடுப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இச் சட்டத்தை மீறுதல் தண்டப்பணம் செலுத்துவதற்கு அல்லது 2 வருடச் சிறைத் தண்டனைக்கு உட்படுத்தக்கூடிய குற்றமாகும்.
2. 18 வயதிற்கு குறைந்த நபரொருவர்
   - (அ) பிச்சை எடுப்பதற்கு ஆயத்தப்படுத்துதல் அல்லது
   - (ஆ) பாலியல் தொடர்புக்காக கூட்டிக் கொடுப்பதற்காகச் செயல்படுவதற்கு சிறுவர்களைக் கூலிக்கு அமர்த்தல் அல்லது சேவையில் ஈடுபடுத்தல்.
   - (இ) வரையறுக்கப்பட்ட பொருட்கள் அதாவது விஷப்பொருட்கள், அபின் அபாயம் விளைவிக்கப்படும் ஒளடதச் சட்டத்தில் விபரிக்கப்பட்டிருக்கும் தடைசெய்யப்பட்டுள்ள பொருட்களை வியாபாரம் செய்வதற்கு சிறுவர்களைக் கூலிக்கு அமர்த்துதல் அல்லது சேவையில் ஈடுபடுத்துதல்.

   தண்டம் செலுத்துவதற்கும் சிறைத் தண்டனை அனுபவிப்பதற்கும் உட்படுத்தப்பட வேண்டிய குற்றமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சட்டவிதிகளுக்கிணங்க பாலியல் துஷ்பிரயோகம் அதாவது 16 வயதுக்கு குறைந்த சிறுவர்களுடன் பாலியல் செயல்களில் ஈடுபடுதல் பாரதூரமான தண்டனையைப் பெறக்கூடிய குற்றம் என வரைவிலக்கணம் செய்யப்பட்டிருக்கிறது.

(சட்டத்தின் முழுவதையும் 3ஆம் இணைப்பில் பார்க்கவும்)

## 05. 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டம

## National Child Protection Act, No 50 of 1998

இச்சட்டத்தின் மூலம் சிறுவர்களுடைய பாதுகாப்பு பற்றிய வேலைகளைச் செய்யும் பிரதான நிறுவனமான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசசபை சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய விசாரணை மற்றும் சட்டத்தைச் செயற்படுத்துதல், சட்டத்தைத் திருத்தம் செய்தல், ஆலோசனை வழங்குதல், ஆய்வுகள், சட்ட உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல், தேசிய மட்டத்தில் விழிப்புணர்வூட்டல் போன்ற கருமங்களில் ஈடுபட்டு இருக்கும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய கருமங்களை ஆற்றுவதற்கு, சிறுவர் பாதுகாப்பு குழுக்களை மாவட்ட மட்டத்தில் அமைத்து இருப்பதுடன் அதிகார சபையினால் இவற்றின் கருமங்கள் கூட்டிணைக்கப்படுகிறது. பதுளை, களுத்துறை, கம்பஹா, காலி, குருணாகல், அனுராதபுரம், அம்பாந்தோட்டை, கொழும்பு, அம்பாறை, இரத்தினபுரி, யாழ்ப்பாணம் மற்றும் கண்டி ஆகிய நகரங்களில் இந்தக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

வைத்தியத் தொழிலை மேற்கொண்டவர்கள், சட்டவைத்திய அதிகாரிகள், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, சமூக சேவைகள், கல்வி, பொலிஸ், சட்டமாதிபதி போன்ற திணைக்களங்களின் பிரதிநிதிகள், அரச சார்பான அமைப்புக்களின் பிரதிநிதிகள் சமயத் தலைவர்கள் தொழில் ஆணையாளரின் பிரதிநிதிகள் போன்ற பல்வேறு துறைகளிலுள்ள பிரதிநிதிகள் இந்தக் குழுக்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கப்பட்டுள்ளனர். இந்தப் பிரதிநிதிகளுக்கு விழிப்புணர்வூட்டும் கடமைகள் அதிகார சபையினால் நடத்தப்படுகிறது.

## அதிகாரங்களும் கருமங்களும்

1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் பிரகாரம் அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களும் கருமங்களும் கீழே காட்டப்பட்டுள்ளது.

(அ) சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தவிர்த்தல், துஷ்பிரயோகங்களுக்கு இரையான சிறுவர்களை பாதுகாத்தல், மற்றும் அவர்களுக்கு நிவாரணம் வழங்கல் போன்ற விடயங்களுக்கு ஏற்புடைய தேசியக் கொள்கையைத் தயாரிப்பதற்கு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

(ஆ) துஷ்பிரயோகக்களிலிருந்து தப்புவதற்காக சிறுவர்களுக்குள்ள உரிமைகள் பற்றியும் சிறுவர் துஷ்பிரயோகங்களை இல்லாதொழிக்கும் முறைகள் பற்றியும் விழிப்புணர்வு ஊட்டல்.

(இ) சிறுவர் துஷ்பிரயோகங்களை இல்லாதொழிப்பதற்கு உகந்த தேசியக் கொள்கையை பயன்தரும்வகையில் செயற்படுத்துவதற்கு எடுக்கவேண்டிய சட்டம் சார்ந்த நிர்வாகம் சார்ந்த மற்றும் ஏனைய நடவடிக்கைகளை விதந்துரைத்தல்.

(ஈ) சகலவிதமான சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக எல்லாவிசாரணைகளிலும் குற்றவியல் வழக்குகளிலும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.

(உ) ஆயுதபாணியினால் ஏற்பட்ட பிணக்குகளில் இரையான சிறுவர்கள் தொடர்பாக மானசீகமான முறையில் எடுக்கவேண்டிய நடவடிக்கைக்கு கருமமாற்றுவதற்கு செயல்முறைகளை விதந்துரைத்தல் மற்றும் அவர்களுடைய மானசீக உடல்சார்ந்த நன்மைகளுக்கு ஏற்புடையதுமான எடுக்கவேண்டிய நடவடிக்கை உட்பட அப்படியான சிறுவர்களின் பாதுகாப்பும் அவர்கள் மீண்டும் சமூகத்தில் இணைந்து கொள்வதற்காக எடுக்கவேண்டிய செயல்முறைகளை விதந்துரைத்தல்.

(ஊ) குற்றவியல் விசாரணை மற்றும் குற்றவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்குகளில் சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் பாதுகாத்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கையை எடுத்தல்.

(எ) சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய மக்களின் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் அந்த முறைப்பாடுகளை உரிய அதிகாரிகளுக்கு அனுப்புதல்.

(ஏ) சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக ஆய்வுகளை நடாத்துதல், உபாயமூலங்களை மேம்படுத்தல் மற்றும் கூட்டிணைப்புச் செய்தல்.

(ஐ) சிறுவர்களின் பாதுகாப்புத்தன்மை மற்றும் சிறுவர் உரிமைகளை உறுதிப்படுத்துதல் தொடர்பாக மக்களுக்கு தகவல்களை வழங்குதல் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டல்

(ஒ) சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்புடைய கருத்தரங்குகள், மகாநாடுகள், கலந்துரையாடல் சம்பாஷணைகளை ஒழுங்கு செய்தல் மற்றும் அதற்கான வசதிகளை ஒழுங்கு செய்தல்.

**06. 2005 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க விலைமாதர் தொழிலுக்காக பெண்கள் மற்றும் சிறுவர்களை ஈடுபடுத்தலை தவிர்த்தல் மற்றும் அதற்கெதிராக கருமமாற்றல் பற்றிய இணக்கச் சட்டம்.**

## Convention of Preventing and Combating Trafficking in Women and Children for Prostitution Act, No 30 of 2005

விலைமாதர் தொழிலுக்கு பெண்கள் மற்றும் சிறுவர்களை ஈடுபடுத்துவதை தவிர்த்தல் மற்றும் அதற்கு எதிராக கருமமாற்றுதல் பற்றி இணக்கம் இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தெற்காசியா வலய ஒத்துழைப்புச் சங்கத்தினால் (SAARC) நேபாளத்தில் காத்மண்டு நகரத்தில் இணக்கம் காணப்பட்டது.

2002 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05 ஆம் திகதி மேற்சொள்ளப்பட்ட உடன்பாடு இலங்கை அரசாங்கத்தினால் கைச்சாத்திடப்பட்டதுடன் அதன்பிரகாரம் அந்த உடன்பாட்டின் ஏற்பாடுகளை இலங்கையில் அதிகாரப்படுத்துவதற்கு தேவையான சட்டம் சார்ந்த ஏற்பாடுகளை விதிப்பதற்கு இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் கட்டுப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க இந்தச் சட்டத்தின் மேற்கூறப்பட்ட உடன்பாட்டின் ஏற்பாடுகளை இலங்கையில் அதிகாரப்படுத்தியுள்ளது. இந்தச் சட்டத்தினால் விலைமாதர் தொழிலுக்கு பெண்கள் மற்றும் சிறுவர்களை ஈடுபடுத்துவதற்கு எதிராக கடுமையான தண்டனை இயற்றப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் கீழான குற்றங்களை விசாரணை செய்வது, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் அல்லது மேல்மாகாண மேல் நீதிமன்றத்தில் மாத்திரமேயாகும். அப்படியே சட்டத்தின் மூலம், சட்டத்தில் குறிபிட்ட குற்றங்கள் தொடர்பாக கருமமாற்றும்பொழுது இலங்கை மற்றும் ஏனைய "சாக்" வலய நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்புடன் கருமமாற்றுவதற்காக தேவையேற்படக்கூடிய மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு இச் சட்டத்தின் மூலம் அமைச்சருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதுடன் அவ்விதமான நடவடிக்கைக்கு தேவையேற்படக்கூடிய ஏற்பாடுகள் காலத்திற்கு காலம் வழங்கப்படக்கூடியதாக இருக்கின்றது.

இச்சட்டத்தின் பிரகாரம் இத் தொழிலில் ஈடுபடுத்தல் என்பது சம்பந்தப்பட்ட நபருடைய விருப்பத்துடன் அல்லது விருப்பமின்றியோ அல்லது பணத்திற்கு அல்லது வேறு உதவிக்காக ஒரு நாட்டில் அல்லது அந்த நாட்டிற்கு வெளியில் விலைமாதர் தொழிலுக்காக பெண்கள் மற்றும் சிறுவர்களை கொண்டு செல்லல், விற்பனை செய்தல், விலைக்கு வாங்குதல் ஆகியவை கருதப்படும். இங்கே "சிறுவர்" எனக் கருதப்படுபவர் 16 வயதுக்குகுறைந்த ஒரு நபராகும்.

சிறுவர் துஷ்பிரயோகங்களைக் குறைப்பதற்காக வலய மட்டத்தில் முக்கிய உடன்படிக்கையை இலங்கையில் செயற்படுத்தக்கூடிய சிறந்த முயற்சியாக இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07. 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இல்லத்து வன்முறைகளைத் தவிர்க்கும் சட்டம்

## (Prevention of Domestic Violence Act No 34 2005

இந்தச் சட்டத்தினால் இல்லத்து வன்செயல்களால் துன்பத்திற்குள்ளாகும் யாராவதொருவருக்கு உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. இச் சட்டத்தின் விசேடம் என்னவெனில் இதனால் சட்டபூர்வமாக திருமணம் செய்த கணவன் மனைவிக்கு மாத்திரமன்றி சட்டபூர்வமற்ற முறையில் திருமணம் செய்யாது ஒன்றாக வாழ்க்கை நடாத்திவரும கணவன் மனைவிமார்களுக்கு மற்றும் சட்டப்படி பிரிந்து இருக்கின்ற கணவன் மனைவிமார்களுக்கும் இல்லத்து வன்செயல்களுக்கு எதிராக நிவாரணங்களைப் பெறுவதற்கு முடியுமாக இருக்கிறது.

இந்தச் சட்டத்தின் கீழ் நிவாரணங்களைப் பெறுவதற்கு இல்லத்து வன்முறைச் செயல் மூலம் துன்பத்திற்கு உள்ளாகும் யாராவதொருவருக்கு சட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விதத்தில் விண்ணப்பம் ஒன்றைப் பூர்த்திசெய்து சம்பந்தப்பட்ட பிரதேச நீதிவான் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்து நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருக்கிறது.

சட்டத்தில் 2 ஆம் (2) உப பிரிவின் பிரகாரம் இவ்விதமான விண்ணப்பம்

(அ) துன்பத்துக்கு உள்ளாகும் நபரொருவரினால்

(ஆ) துன்பத்துக்குள்ளாகும் நபர் சிறுவனாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அந்த சிறுவன் சார்பாக

- (i) சிறுவனின் தாய் தந்தையர்களுள் ஒருவரினால் அல்லது சிறுவனின் பாதுகாவலர் ஒருவரினால்
- (ii) சிறுவன் வசிக்கும் இடத்தில் வசித்துவரும் நபரொருவரினால்
- (iii) 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் எழுத்து மூலமான அதிகாரமளிக்கப்பட்ட நபரொருவரினால் அல்லது

(இ) துன்பத்துக்குள்ளாகும் நபரொருவர் சார்பாக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரினால் சமர்ப்பிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கு இல்லத்து வன்செயல் ஒன்று நடாத்தப்பட்டு இருத்தல் அத்தியாவசியமாக இல்லாமல் இருப்பதுடன் எதிர்காலத்தில் இடம் பெறுவதற்கு உள்ளதென சாதாரணமான முறையில் சந்தேகப்படக்கூடிய இல்லத்து வன்செயலுக்கு எதிராகவும் இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க முடியும்.

இப்படியான விண்ணப்பம் கிடைத்த உடனேயே நீதிவான் ஒருவரினால் அது பற்றி தாமதமின்றி சீர்தூக்கிப் பார்க்கப்படும் விண்ணப்பம் மற்றும் சத்தியக்கடதாசி இருக்குமானால் அந்தச் சத்தியக் கடதாசியும் சீர்தூக்கிப் பார்த்ததின் பின்பு நீதிமன்றத்தினால்

(01) இடைக்கால பாதுகாப்புக் கட்டளையொன்று (Interim Protection Order)

(02) பாதுகாப்புக் கட்டளையொன்று (Protection Order)

(03) பாதுகாப்புக் கட்டளை ஒனறு வழங்கப்பட்டதின் பின்பு தேவையேற்படின் மேலதிகமான ஒரு கட்டளையையும் வழங்கமுடியும்.(Supplementary Order)

இடைக்காலப் பாதுகாப்புப் கட்டளை ஒன்றினால் பாதுகாப்புக் கட்டளை ஒன்று வழங்குவது பற்றிய விண்ணப்பத்தை விசாரணை செய்து கொண்டிருக்கிற சந்தர்ப்பத்தில் பிரதிவாதியினால் ஏதாவதொரு இல்லத்து வன்முறைச் செயல் ஒன்று நடந்துகொண்டிருத்தல் அல்லது நடப்பதற்கு கருமங்களைச் செய்தல் தடுக்கப்படும்.

பாதுகாப்புக் கட்டளையினால் ஏதாவதொரு இல்லத்து வன்முறைச் செயல்

ஒன்றைச் செய்வதிலிருந்து அல்லது செய்வதற்கு ஒழுங்கு செய்வதிலிருந்து பிரதிவாதியைத் தடுக்க முடியும்.

இடைக்காலப் பாதுகாப்புக் கட்டளை அல்லது பாதுகாப்புக் கட்டளையில் இருக்க வேண்டிய தடைகள்.

சட்டத்தின் 11 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் இடைக்கால பாதுகாப்புக் கட்டளை மூலம் அல்லது பாதுகாப்புக் கட்டளை மூலம் பிரதிவாதி

(அ) துன்பத்துக்குள்ளாகும் நபரொருவர் மற்றும் பிரதிவாதி கூட்டாக வசிக்கும் ஏதாவதொரு வசிப்பிடத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அதன் ஒரு பகுதிக்கு பிரவேசித்தல்.

(ஆ) துன்பத்துக்குள்ளாகும் நபரொருவருடைய

(i) வசிப்பிடத்திற்கு

(ii) சேவை செய்யும் இடத்திற்கு

(iii) பாடசாலைக்கு

உட்பிரவேசித்தல்

(இ) துன்பத்துக்குள்ளாகும் நபரொருவர் தற்காலிகமாக தங்கி இருக்கிற ஏதாவதொரு இடத்திற்கு உட்பிரவேசித்தல்

(ஈ) துன்பத்துக்குள்ளாகும் நபரொருவரினால் பொதுவாக வசிக்கும் அல்லது வாசம் செய்யும் கூட்டு வசிப்பிடத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு உட்பிரவேசித்தல் அல்லது அதற்குள் தங்கி இருத்தல்.

(உ) கூட்டாக வசிக்கும வீட்டில் வசிப்பதிலிருந்து

(ஊ) துன்பத்திற்குள்ளாகும் நபரொருவருடைய யாராவதொரு சிறுவனுடன் தொடர்புகள் வைத்திருத்தல், அந்தச் சிறுவனுடைய நன்மைக்காக என்று நீதிமன்றம் திருப்திப்படும் சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்தினால் உசிதமானதெனக் கருதப்படும் நிபந்தனைகளைப் பூரணப்படுத்துதல் தவிர்ந்த துன்பத்துக்குள்ளாகும் நபரொருவருடைய சிறுவனுடன் தொடர்புகளை வைத்திருத்தல்.

(எ) துன்பத்துக்குள்ளாகும் நபர் கூட்டாக ஆண்டு அனுபவிக்கும் ஏதாவதொரு வளங்களைப் பிரயோசனப்படுத்தலிலிருந்து அல்லது அந்த வளங்களுக்கு உட்பிரவேசித்தல்.

(ஏ) எந்தவொரு விதத்திலும் துன்பத்துக்குள்ளாகும் நபருடன் தொடர்புடைய அல்லது தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு முயற்சித்தல்.

(ஐ) துன்பத்துக்குள்ளாகும் நபருக்கு உதவியளிக்கும் உறவினர், நண்பர், சமூகசேவை செய்பவர் அல்லது மருத்துவ உத்தியோகத்தர் போன்ற வேறு யாராவதொரு நபருக்கெதிராக வன்செயல்களைச் செய்வதிலிருந்து

(ஒ) தொல்லையை ஏற்படுத்தும் விதத்தில் துன்பத்துக்குள்ளாகும் நபரொருவருக்கு பின்னாலே செல்லுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஓ) நீதிமன்றத்தின் கருத்துப்படி பிரதிவாதியிடமிருந்து பாதுகாப்பு தேவையான துன்பத்துக்குள்ளாகும் நபரொருவருடைய அல்லது வேறு நபரொருவருடைய பாதுகாப்பிற்கு, சுகாதாரத்திற்கு அல்லது நன்மைக்கு தீங்கு விளைவிப்பவரும் நீதிமன்றத்தினால் பாதுகாப்புக் கட்டளையில் நிச்சயமாகக் காட்டப்படக் கூடியதும் மற்றைய செயல்களில் ஈடுபட்டிருத்தல்.

(ஔ) துன்பத்துக்குள்ளாகும் நபரொருவரை உதவியற்ற முறையில் அவரை ஆளாக்குவதற்கு திருமணம் சார்ந்த வீட்டை விற்பனை செய்தல் கையளித்தல், மற்றஒருவருக்கு உடமையாக்குதல், அல்லது அவருக்குப் பொறுப்புகளைச் சுமக்கவைத்தல் போன்ற நடவடிக்கை எடுத்தல் போன்ற செயல்களை தடைசெய்ய முடியும்.

மேலதிகக் கட்டளை ஒன்றை வழங்குதல்
சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவின் பிரகாரம்

பாதுகாப்பு கட்டளை ஒன்று வழங்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் மற்றும் துன்பத்திற்குள்ளான நபருடைய பாதுகாப்பு, சுகாதாரம் அல்லது நலன்களை பாதுகாத்தல் மற்றும் அதற்காக ஏற்பாடுகளை ஒழுங்கு செய்தல் பொதுவாக அவசியமானதென நீதிமன்றம் திருப்தியடையும் சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்தினால்

(அ) பிரதிவாதியின் வசம் இருக்கக்கூடிய ஏதாவதொரு ஆயுதங்களை பொலிசாரினால் கைப்பற்றப்படவேண்டும் என்று

(ஆ) துன்பத்துக்கு உள்ளாகிய நபரொருவருடையதும் மற்றும் அவருக்கு பிள்ளைகள் இருந்தால் அந்தப் பிள்ளைகளின் தனிப்பட்ட சொத்துக்களை சேர்ப்பதற்கு உதவியளிக்கும் பொருட்டு துன்பத்துக்குள்ளாகிய நபரும் ஏதாவதொரு இடத்திற்கு செல்லவேண்டும் என்று பொலிசாருக்கு கட்டளையிடுவதற்கு

(இ) உரியமுறையிலான ஆலோசனைப்பருவகால உள நோயாளர் சிகிச்சை அல்லது வேறு விதத்திலான புனருத்தாபன சிகிச்சைகளுக்கு கலந்துகொள்ளும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிவாதிக்கு மற்றும் துன்பத்துக்குள்ளாகும் நபரொருவருக்கு

(ஈ) துன்பத்துக்குள்ளாகும் நபரொருவர் விண்ணப்பம் செய்வாரானால் அவருக்கு அல்லது அவளுக்கு தற்காலிக தங்குமிட வசதிகளை வழங்கக்கூடியதுடன், தேவையானால் அப்படி தங்கி இருக்கும் இடத்தின் அமைப்பு மற்றும் வேறுவிபரங்களை இரகசியமாகப் பேணவேண்டும் என்றும்

(உ) சமூக சேவையாளர், குடும்ப ஆலோசகர், நன்னடத்தை அதிகாரி அல்லது குடும்ப சுகாதார சேவகர் போன்றோர்களினால் துன்பத்துக்குள்ளாகும் நபர் மற்றும் பிரதிவாதிக்குமிடையில் உள்ள பாதுகாப்புக் கட்டளையை மீளாய்வு செய்யவேண்டும் என்றும் மற்றும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அதன் தொடர்பான அறிக்கைகளை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென்றும்

(ஊ) யாராவதொருவருக்கு உதவிசெய்வதற்கு பிரதிவாதி கடமையாயுள்ள சந்தர்ப்பத்தில் பிரதிவாதியினால் அந்த நபருக்கு அவசர பண உதவியை பெற்றுக் கொடுக்கவேண்டும்மென்று

(எ) II ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட கட்டளையினால் துன்பத்துக்குள்ளாகும் நபர் தங்கி இருக்கும் இடத்திற்கு பிரவேசித்தல் அல்லது தங்கி இருத்தல் பிரதிவாதிக்கு

தடைசெய்யப்பட்டிருந்தபோதிலும் அதைப் பொருட்படுத்தாது அந்தக் கட்டளையைச் செயற்படுத்தும் காலத்தினுள் துன்பத்துக்குள்ளாகும் தரப்பினர் தங்கி இருக்கும் ஏதாவதொரு இடத்தில் அந்த தரப்பினருக்கு தொடர்ந்தும் தங்கியிருப்பதற்கு முடியுமான முறையில் தேவையான சந்தர்ப்பத்திற்கு உசிதமான விதத்தில் பணக் கொடுப்பனவு செய்தல், மற்றம் வசதிகளை ஒழுங்கு செய்தல் அல்லது பணக் கொடுப்பனவு அல்லது வசதிகளை ஒழுங்கு செய்தல் பிரதிவாதியினால் செய்து கொள்ளவேண்டும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளையை இடமுடியும்.

* இடைக்கால பாதுகாப்புக் கட்டளை அல்லது பாதுகாப்புக் கட்டளை பற்றி திருப்தியடையாத பிரதிவாதிக்கு, சம்பந்தப்பட்ட கட்டளைக்கு எதிராக மாகாணம் சார்ந்த மேல்நீதிமன்றத்தில் மேன்முறையீடொன்றைத் தாக்கல் செய்யமுடியும்.

இந்தச் சட்டத்திற்கு ஏற்புடைய விதத்தில் பாதுகாப்புக் கட்டளையை வழங்கிய மாத்திரத்தில் பிரதிவாதி குற்றமானவர் என்ற தன்மையை நிரூபிக்க முடியாது. இச்சட்டத்தில் நோக்கமாகக் கொண்டிருப்பது யாதெனில் இல்லத்து வன்செயல்களினால் துன்பத்துக்கு ஆளாகும் தரப்பினர்களுக்கு பாதுகாப்பை வழங்குவது மாத்திரமே. குற்றவாளி எனத் தீர்மானித்து தண்டனையை வழங்குவது இச்சட்டத்தினால் நோக்கமாகக் கொள்ளப்படவில்லை.

எப்படியிருந்தபோதிலும், நீதிமன்றத்தினால் வழங்கப்படுகின்ற பாதுகாப்புக் கட்டளைக்கு இணங்கிச் செல்வதற்கு பிரதிவாதி தரப்பினர் கட்டுப்பட்டுள்ளனர். ஏதாவது விதத்தில் பிரதிவாதி தரப்பினர் தங்களுக்கு எதிராக வழங்கப்பட்ட இடைக்கால பாதுகாப்புக் கட்டளைக்கு அல்லது பாதுகாப்புக் கட்டளைக்கு அனுகூலமாகச் செயல்படத் தவறுவார்களாயின் அந்த பிரதிவாதிக்கெதிராக நீதிவான் ஒருவருக்கு முன்னிலையில் சுருக்கமற்ற நடவடிக்கை வழக்கு ஒன்றை நடாத்தலாம். இந்த வழக்கு விசாரணையில் பிரதிவாதி கட்டளைக்கு அனுகூலமாகச் செயற்படத் தவறியதற்கு குற்றவாளியெனக் காணப்பட்டால்

1. பத்தாயிரம் ரூபாவுக்கு குறையாத தண்டப்பணம் செலுத்துவதற்கு அல்லது
2. ஒரு வருடத்திற்கு குறையாத காலத்திற்கு இருவிதங்களில் ஒரு விதத்தில் சிறைத்தண்டனை அல்லது
3. தண்டப்பணம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய இரண்டு தண்டனைக்கும் உட்பட்டவராவார்.

2005ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க இல்லத்துவன்முறைச் செயல்களைத் தவிர்க்கும் சட்டத்தின் கீழ் நிவாரணங்களைப் பெறுவதற்கு நீதிவான் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டிய விண்ணப்பம் கீழே காட்டப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விண்ணப்பம்**

.....................நீதிவான் நீதிமன்றம்

..............................வசிக்கும் ஏ.பி.(துன்பத்துக்குள்ளாகும் நபருடைய பெயர் விபரங்கள், விலாசம், மற்றும் அவர் யாராவதொருவரை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வழக்கை தாக்கல் செய்பவராயின் அந்த நிலைமையைக் குறிப்பிடவும். உதாரணம் : திருப்தியடையாத நபரொருவர் அவருடைய பாதுகாவலர் அல்லது உதவிபுரியும் நண்பர் மூலம் தோன்றும் பராயமடையாதவர் அல்லது புத்தி சுவாதீனமற்றவராக இருந்தால் இப்படிக் கூறவும். பராயமற்றவர், அவருடைய உதவியாளர் நண்பராகிய ....................................சீ.டி. மார்க்கமாக

(துன்பத்துக்குள்ளாகும் நபர்)

எதிராக

.....................வை. இசட் (சம்பந்தப்பட்ட நபரின் பெயர், விபரம், மற்றும் விலாசம்)....................... ஆகிய சம்பந்தப்பட்ட நபர் 200....... மாதம்..........திகதியில் (தன்னுடைய பதிவுசெய்யப்பட்ட வழக்கறிஞர் சி.எச். மூலம் தோன்றும்) மேற்கூறப்பட்ட துன்பத்துக்குள்ளாகும் நபருடைய அல்லது நபர்களுடைய முறைப்பாட்டில் இவ்விதம் குறிக்கப்பட்டுள்ளது. (இந்த வழக்கு தாக்கல் செய்வதற்குரிய விடயங்களைக் குறிப்பிடவும்) ஆகவே 200...... ஆம் ஆண்டு ......... மாதம்...... ஆம் திகதியிலிருந்து வழங்கும் வகையில் பிரதிவாதிக்கெதிராக பாதுகாப்புக் கட்டளை ஒன்றை இடும்படி துன்பத்துக்குள்ளாகும் நபர் /அல்லது துன்பத்துக்குள்ளாகும் நபர்கள் கௌரவ நீதிமன்றத்திடம் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

................................

கையொப்பம்

துன்பத்துக்குள்ளாகிய நபர்

## இல்லத்து வன்செயல்களைத் தவிர்க்கும் சட்டத்தின் கீழ் முக்கிய விடயங்கள்

- இந்த சட்டத்தில் சிறுவர் என்பது 18 வயதுக்கு குறைந்த நபரொருவர் எனக் கருதப்படும்.
- இல்லத்து வன்முறைச் செயல் என்பது துன்பத்துக்குள்ளாகும் நபர் மற்றும் பிரதிவாதி (துன்பம் செய்பவர்) க்கும் இடையில் தனிப்பட்ட இயல்பு தொடர்பாக எழுகின்றதும், வீட்டின் சூழலுள் அல்லது வெளியில் துன்பம் செய்பவரினால் செய்யப்படுகின்ற ஒரு செயல் எனக் கருதப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வன்முறைச் செயல் என்பது உடலுக்கு ஊறுவிளைவித்தல் மாத்திரமன்றி அவதூறான சொற்பிரயோகமும் இதனுள் அடங்கும்.
- இந்தச் சட்டத்தின் மூலம் நிவாரணத்தைப் பெற்ற துன்பத்துக்குள்ளாகும் நபருக்கு துன்பம் செய்பவருக்கெதிராக மீண்டும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கொன்றைத் தாக்கல் செய்வதற்கு சட்டம் சார்ந்த தடையொன்றும் இல்லை.

**08. 2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவை (திருத்தச் சட்டம்)**

## Penal Code (Amendment) Act, No 16 of 2006

தண்டனைச் சட்டக் கோவையைத் திருத்தம் செய்தல், மற்றம் சிறுவர் தொடர்பாக சில குற்றங்கள் தொடர்பாக ஏற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்கு பாராளுமன்றத்தினால் 2006 ஆம் வருடத்தில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் பிரகாரம் கீழ் குறிப்பிட்ட செயல்கள் தண்டனை பெறக் கூடிய குற்றங்கள் என வரைவிலக்கணம் செய்யப்பட்டது

(i) கணனி வசதிகள் மூலம் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் கணனியின் மூலம் சேவைகளை வழங்கும் நபரொருவரினால் சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பாக குற்றத்திற்குள்ளாகும் செயல் ஒன்றை புரிவதற்கு அந்த கணனி வசதிகளை உபயோகிக்கப்படவில்லை என்பதற்கு உறுதிசெய்யும் பொருட்டாக அவசிய சகல நடவடிக்கைகளும் எடுக்க வேண்டி இருப்பதுடன், அவ்விதமான செயல் பற்றி அறிந்த உடனேயே அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு சென்று அறிவிக்க வேண்டும். அப்படிச் செய்யாமலிருத்தல் தண்டனை பெறக்கூடிய குற்றமாகும்.

(ii) ஏதாவது ஒரு வீட்டு முன்றிலை (Premises) சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு பாவித்தல்

சிறுவரை துஷ்பிரயோகம் செய்தலுக்குள்ளாகும் செயல்களைப் புரிவதற்காக ஏதாவது ஒரு வீட்டு முன்றிலை (Premises) பாவித்துக் கொண்டிருப்பது என அறிவதற்கு கிடைக்கும் அந்த முன்றிலுக்கு உரிமையாளராக உள்ள நபர் அல்லது அந்த முன்றிலுக்கு பாதுகாப்பு அளிக்கும் நபர் அல்லது அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வகிக்கும் அல்லது அதனை தன்னுடையதாகக் கொண்டிருக்கும் நபரொருவரால் உடனடியாக அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்குச் சென்று அது பற்றி அறிவிக்க வேண்டும். அப்படிச் செய்யாமலிருத்தல் தண்டனை பெறக்கூடிய குற்றமாகும்.

மேற்கூறப்பட்ட இலக்கம் (i) அல்லது (ii) குற்றங்களுக்கு 2 வருடங்களுக்கு குறையாத காலத்திற்கு இரண்டு முறையில் முதல் முறையில் சிறைத்தண்டனை அனுபவிப்பதற்கும் அல்லது குற்றப்பணம் செலுத்துவதற்கும் அல்லது இரண்டு முறையிலும தண்டனை பெறமுடியும்.

iii) சட்டவிரோதமான செயல்களுக்காக நபர்களை / சிறுவர்களைச் சேர்த்துக்கொள்ளல்

(அ) யாராவதொருவரை கடனாளியாக்குவதற்கு அல்லது அடிமைப்படுத்துவதற்கு உள்ளாக்கப்படுவதற்கு அல்லது உள்ளாக்குவதற்கு ஆயத்தம் செய்கிற

(ஆ) எந்த நபரையாவது பலாத்காரமாக அல்லது கட்டாயமாக வேலைசெய்வதற்கு உள்ளாக்கப்படுத்துகிற அல்லது அப்படி உள்ளாக்கப்படுவதற்கு ஆயத்தம் செய்கிற

(இ) எந்த நபரையாவது அடிமைத்தனத்திற்கு உட்படுத்துவதற்கு ஆயத்தம் செய்கிற அல்லது

(ஈ) ஆயுத உதவியுடன் சண்டைக்கு ஈடுபடுத்துவதற்காக யாராவதொரு சிறுவனை ஈடுபடுத்துதல் அல்லது சேர்த்துக் கொள்கிற

நபரொருவர் இந்தப் பிரிவின் கீழ் குற்றவாளியாகக் காணமுடியும். அதற்காக கீழ்க் கண்டவிதமாக தண்டனையை விதிக்கமுடியும்.

மேல்கூறப்பட்ட (அ) (ஆ) மற்றும் (இ) பந்திகளில் குறிப்பிட்ட குற்றங்கள் 18 வயதுக்கு மேற்பட்ட ஆளொருவருக்கு எதிராக சுமத்தப்படுவதாய் இருந்தலல் குற்றவாளியான ஆளுக்கு 20 வருடங்களுக்கு குறையாத சிறைத்தண்டனையும் மற்றும் தண்டப் பணமும்

மேல்கூறப்பட்ட எல்லா குற்றங்களும் 18 வயதுக்கு குறைந்த ஆளுக்கெதிராக சுமத்தப்படுவதாய் இருந்தால் 30 வருடங்களுக்கு குறையாத சிறைத்தண்டனை மற்றும் தண்டப்பணமும் செலுத்துவதற்கு கட்டளையிடப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv ஆட்கள் வியாபாரம் செய்தல்

(அ) பணம் அல்லது வேறு நன்மைகளைப் பெறும் பொருட்டாக எவராவது ஒருவர் விலைக்கு வாங்கும், விற்கும் அல்லது பரிமாற்றம் செய்யும் அல்லது விலைக்கு வாங்குவதற்கு, விற்பனை செய்வதற்கு அல்லது பரிமாற்றம் செய்வதற்கு வேறு ஒரு நபரைத் தூண்டும் அல்லது எவராவது ஒருவர் விலைக்கு வாங்குதல், விற்றல் அல்லது பரிமாற்றம் செய்வதற்காக மேம்படுத்துவதற்கு வசதிகளை ஒழுங்குபடுத்துவதற்கு அல்லது துாண்டுவதற்கு ஏதாவதொன்றைச் செய்கிற,

(ஆ) பலாத்காரமாக அல்லது கட்டாயமாக வேலை வாங்குதல், அல்லது சேவையைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் அடிமைப்படுத்துவதில் ஈடுபடும், ஒருவர அல்லது சரீரத்தின் ஓர் அங்கத்தை நீக்கும், விலைமாதர் தொழிலில் ஈடுபடும் அல்லது வேறுவிதத்தில் முறையற்ற பாலியல் பிரயோசனங்களைப் பெறும் அல்லது ஏதாவது சட்டத்தின் கீழ் குற்றத்தையுடையவராக இருந்து வேறு ஏதாவது செயலில் ஈடுபடும் கருமதத்திற்காக அச்சுறுத்தி, பலாத்காரமாக, வஞ்சனையுடன் ஏமாற்றியும், தூண்டியும் அல்லது வேறு ஒரு ஆளுடைய துன்பம் தரும் நிலையில் முறையற்ற பிரயோசனங்களைப் பெறும், எவரையாவது சேர்த்துக் கொள்ளும், போக்குவரத்துச் செய்யும், இடமாற்றம் செய்யும் பாதுகாப்பை ஒழுங்குபடுத்திக் கொடுக்கும், ஏற்றுக்கொள்ளும் அல்லது வேறு ஏதாவது செயலைச் செய்யும் அல்லது

(இ) யாரையாவது ஒரு சிறுவனிடமிருந்து பலாத்காரமாக அல்லது கட்டாயமாக வேலைவாங்கும் அல்லது சேவையைப் பெற்றுக்கொள்ளும் அந்தச் சிறுவனை அடிமைத்தனத்தில் ஈடுபடுத்தல் சரீரத்தின் ஓரங்கத்தை நீக்கும், விலைமாதர் தொழிலில் அல்லது வேறு விதத்தில் முறையற்ற பாலியல் பிரயோசனங்களைப் பெறும் கருமத்திற்காக அல்லது ஏதாவது சட்டத்தின் கீழ் குற்றத்தையுடையவராகவுள்ள வேறு ஏதாவது செயலுக்காக அந்தச் சிறுவனின் விருப்பத்துடன் அல்லது விருப்பமின்றி, அந்தச் சிறுவனை வேலைக்குச் சேர்த்துக் கொள்ளல், போக்குவரத்துச் செய்யும், மாற்றம் செய்யும் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவனுக்கு பாதுகாப்பு ஒழுங்கு செய்து கொடுத்து அல்லது சிறுவனை ஏற்றுக் கொள்ளும் அல்லது வேறு ஏதாவது செயலைச் செய்யும், எந்த ஒரு நபரையும், நபர்களையும் வியாபாரம் செய்யும் குற்றத்திற்கு குற்றவாளியாவார்கள்.

ஆட்களை வியாபாரம் செய்யும் குற்றத்தைப் புரியும் யாராவதொருவர் குற்றவாளியாகும்பொழுது இரண்டு வருடத்திற்கு குறையாததும் இருபது வருடங்களுக்கு குறைவான காலத்திற்கு இருவிதத்திலும், ஒரு விதத்தில் சிறைத்தண்டனைக்கு அனுப்புவதன் மூலம் அவருக்கு தண்டனை கொடுப்பதுடன் குற்றப் பணம் செலுத்த வைப்பதிலும் அவருக்கு தண்டனை அளிக்கமுடியும். மேலும் சிறுவர் தொடர்பாக அந்தக் குற்றத்தை செய்யும் சந்தர்ப்பத்தில் அவருக்கு மூன்று வருடத்திற்கு குறையாததும் இருபது வருடத்திற்கு அதிகரிக்காத காலத்திற்கு இருவித்தில் ஒருவிதத்தில் சிறைத்தண்டனை கொடுப்பதின் மூலம் தண்டனை அளிக்கப்படுவதுடன் தண்டப் பணம் செலுத்துவதையும் அவருக்குரிய தண்டனையாகக் கொள்ள முடியும்.

iv சிறுவரைத் தூண்டுவதற்கு முயற்சி செய்தல்

பாலியல் துஷ்பிரயோகத்திற்காக

(அ) பதினெட்டு வயதுக்குக்குறைந்த நபரொருவரை அல்லது

(ஆ) பதினெட்டு வயதுக்கு குறைந்த நபர் ஒருவரென நம்பப்படுகிற எவராவது ஒரு நபர்

இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் எந்த விதத்திலும் தூண்டுவதற்கு முயற்சி எடுக்கிற எந்தவொரு நபரும் சிறுவனொருவனை தூண்டுவதற்கு முயற்சி எடுக்கிற குற்றத்தைப் புரிவதுடன் குற்றவாளியாகக் காணப்பட்டால் பத்து வருடத்துக்கு குறையாத காலத்திற்கு இருவிதங்களில் ஒருவிதத்தில் சிறைத் தண்டனைக்கு அல்லது குற்றப்பணம் செலுத்துவதற்கு அல்லது அப்படியான சிறைத்தண்டனையை அனுபவிப்பதற்கும் தண்டப் பணம் செலுத்துதல் ஆகிய இரண்டுக்கும் அவரை உட்படுத்தப்படவேண்டும்.

இதற்கு மேலதிகமாக இந்தச் சட்டத்தினால் சிறுவனொருவனை பிள்ளையாகத் தத்தெடுத்துக் கொள்வது தொடர்பாக சிலசில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவனுக்கு பாதுகாப்பு ஒழுங்கு செய்து கொடுத்து அல்லது சிறுவனை ஏற்றுக் கொள்ளும் அல்லது வேறு ஏதாவது செயலைச் செய்யும், எந்த ஒரு நபரையும், நபர்களையும் வியாபாரம் செய்யும் குற்றத்திற்கு குற்றவாளியாவார்கள்.

ஆட்களை வியாபாரம் செய்யும் குற்றத்தைப் புரியும் யாராவதொருவர் குற்றவாளியாகும்பொழுது இரண்டு வருடத்திற்கு குறையாததும் இருபது வருடங்களுக்கு குறைவான காலத்திற்கு இருவிதத்திலும், ஒரு விதத்தில் சிறைத்தண்டனைக்கு அனுப்புவதன் மூலம் அவருக்கு தண்டனை கொடுப்பதுடன் குற்றப் பணம் செலுத்த வைப்பதிலும் அவருக்கு தண்டனை அளிக்கமுடியும். மேலும் சிறுவர் தொடர்பாக அந்தக் குற்றத்தை செய்யும் சந்தர்ப்பத்தில் அவருக்கு மூன்று வருடத்திற்கு குறையாததும் இருபது வருடத்திற்கு அதிகரிக்காத காலத்திற்கு இருவித்தில் ஒருவிதத்தில் சிறைத்தண்டனை கொடுப்பதின் மூலம் தண்டனை அளிக்கப்படுவதுடன் தண்டப் பணம் செலுத்துவதையும் அவருக்குரிய தண்டனையாகக் கொள்ள முடியும்.

iv சிறுவரைத் தூண்டுவதற்கு முயற்சி செய்தல்

பாலியல் துஷ்பிரயோகத்திற்காக

(அ) பதினெட்டு வயதுக்குக்குறைந்த நபரொருவரை அல்லது

(ஆ) பதினெட்டு வயதுக்கு குறைந்த நபர் ஒருவரென நம்பப்படுகிற எவராவது ஒரு நபர்

இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் எந்த விதத்திலும் தூண்டுவதற்கு முயற்சி எடுக்கிற எந்தவொரு நபரும் சிறுவனொருவனை தூண்டுவதற்கு முயற்சி எடுக்கிற குற்றத்தைப் புரிவதுடன் குற்றவாளியாகக் காணப்பட்டால் பத்து வருடத்துக்கு குறையாத காலத்திற்கு இருவிதங்களில் ஒருவிதத்தில் சிறைத் தண்டனைக்கு அல்லது குற்றப்பணம் செலுத்துவதற்கு அல்லது அப்படியான சிறைத்தண்டனையை அனுபவிப்பதற்கும் தண்டப் பணம் செலுத்துதல் ஆகிய இரண்டுக்கும் அவரை உட்படுத்தப்படவேண்டும்.

இதற்கு மேலதிகமாக இந்தச் சட்டத்தினால் சிறுவனொருவனை பிள்ளையாகத் தத்தெடுத்துக் கொள்வது தொடர்பாக சிலசில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டவிரோதமான செயல்கள், அதாவது ஏற்புடைய அனுமதியின்றி சிறுவர்களை தத்தெடுத்துக் கொள்வதற்கு உதவிசெய்தல், பிறப்புச் சான்றிதழ் ஒன்றை சட்டவிரோதமான முறையில் மாற்றம் செய்தல், தத்தெடுத்துக் கொள்வதற்காக சிறுவர்களை வியாபாரம் செய்தல் (Trafficking) போன்ற குற்றங்களுக்கும் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டத்தின் பிரகாரம் சிறுவர் என்பது 18 வயதுக்குக் குறையாத நபர் என அர்த்தம் கொள்ளப்பட்டு இருக்கிறது.

## சிறுவர் துஷ்பிரயோகம் அல்லது துர்நடத்தையைத் தவிர்த்தல்

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது வேறு தரப்பினரால் சிறுவர் சட்டபூர்வமற்ற ஒரு செயலுக்காக ஈடுபடுத்துதல் சிறுவர் துர்நடத்தை என்பது சிறுவனாலேயே செய்யப்படுகின்ற சட்டபூர்வமற்ற செயல்களாகும். இவ்விதமாக இரு விதங்களில் எந்தவொரு செய்கையும் சட்டத்தின் பிரகாரம் தண்டனை பெறக்கூடிய குற்றமாகும். சிறுவர் துர்நடத்தை அல்லது துஷ்பிரயோகங்களை தவிர்ப்பதற்காக செயற்படும் பல நிறுவனங்கள் இலங்கையில் இருக்கின்றன. இலங்கையின் சகல பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும் பிரஜைகளும் சிறுவர் துர்நடத்தை அல்லது துஷ்பிரயோகங்கள் பற்றி தான் அறிந்து கொண்ட சகல விடயங்களையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும். சிறுவர் துர்நடத்தை அல்லது துஷ்பிரயோகம் பற்றி அப்படி அறிவிக்கப்படவேண்டிய நிறுவனங்கள கீழே காண்பிக்கப்படுகிறது.

### 01. இலங்கைப் பொலிஸ்

சிறுவர் துர்நடத்தையைத் தவிர்ப்பதற்கு முக்கிய அரசாங்க நிறுவனமாக இருப்பது இலங்கைப் பொலிசாராகும். குற்றங்களைக் குறைப்பதற்குள்ள அரச பொறிகளின் ஒரு பகுதியாக பொலிஸ் திணைக்களம் அந்தக் கருமங்களில் ஈடுபட்டு இருக்கிறது. தொல்லைகளுக்கு அல்லது துன்பங்களுக்கு உள்ளாகும் பெண்கள் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்காக "சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு" என ஒரு பிரிவு பொலிஸ் திணைக்களத்தினுள் 1974 ஆம் ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டில் பொலிஸ் திணைக்களத்தினால் நாடு பூராவும் சகல பொலிஸ் நிலையங்களிலும் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு அமைப்பதை நோக்கமாகக் கொண்ட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வேலைத்திட்டத்தின் கீழ் 1998 ஆம் ஆண்டில் முதலாவதாக பொலிஸ் திணைக்களத்தினால் "சிறுவர் மற்றும் மகளிர் பணியகம்" ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பணியகத்தினால் சிறுவர் மற்றும் மகளிருக்கு எதிராக செய்யப்படும் முறைப்பாடுகளை விசாரணை செய்தல், அவதானிப்புச் செய்தல் மற்றும் அவ்விதமான குற்றங்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

| | |
|---|---|
| விலாசம் :- | பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம்<br>வயிற் எவேஸ் கட்டிடம்<br>இல:25,சேர் பாரென் ஜெயதிலக்க ாவத்தை, கொழும்பு - 01 |
| தொலைபேசி :- | 0112-444444(24மணித்தியாலமும் செயற்படுகிறது) |

நடைபெற்றுக் கொண்டிருக்கிற குற்றச்செயல் பற்றி அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு உடனடியாக அறிவிக்கவேண்டியதுடன் (இலக்கததைத் தேடிக்கண்டுபிடிக்காதவிடத்து போன்ற) ஏதாவது காரணமாக அப்படிச் செய்முடியாதவிடத்து கட்டணம் அறவிடமுடியாத பொலிஸ் அவசர அழைப்பு பிரிவிற்கு அறிவிக்க வேண்டும்.

அதற்காக நாடு பூராவும்உள்ள எந்தவொரு இடத்திலிருந்து கட்டணமின்றி 118 அல்லது 119 இலக்கங்களை அழைக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

சிறுவர் துர்நடத்தை அல்லது துஷ்பிரயோகம் பற்றி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அறிவிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| விலாசம் | :- | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை<br>இலக்கம் 330, தலவத்துகொட வீதி, மாதிவல |
| தொலைபேசி | : | 011-277811, 011-277812 |
| தொலைநகல் | : | 011-277815 |
| மின்னஞ்சல் | :- | info@child protection.gov.lk |

## 03. தொழில் திணைக்களம்

பராயமற்ற சிறுவர்கள் சேவையில் ஈடுபடுத்தல் பற்றி செய்தியை அறிவிக்கவேண்டிய நிறுவனம் தொழில் திணைக்களமாகும். 14 வயதுக்கு குறைவான சிறுவர்கள் சேவையில் ஈடுபடுத்துதல் பற்றிய தகவல்களை கீழ்க் குறிப்பிட்ட நிலையங்களுக்கு அறிவிக்க முடியும்.

உதவித் தொழில் ஆணையாளர்

மாவட்ட தொழில் அலுவலகம் அல்லது

சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தர்

உபதொழில் அலுவலகம் அல்லது

தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| விலாசம் | :- | தொழில் ஆணையாளர்<br>பெண்கள் மற்றும் சிறுவர் நடவடிக்கைப்பிரிவு<br>தொழில் திணைக்களம்<br>கொழும்பு - 05 |
| தொலைபேசி :- | | 011-2587315,011-2369297 |
| தொலைநகல்:- | | 011-2587315 |

## நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களம்

சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் புனருத்தாபனம் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள மற்றுமோர் நிறுவனமாகும். 13 ஆம் அரசியலமைப்பின் திருத்தத்தின் பின் இந்த திணைக்களம் தனது சொந்த அதிகாரங்களை மாகாணசபை மட்டத்தில் பன்முகப்படுத்தப்பட்டு உள்ளது. இந்தத் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்காக அதிகார சபையின் அதிகாரங்கள் அடிப்படையாக 1939 ஆம் ஆண்டின் சிறுவர் மற்றும் பராயமடைந்தவர்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் (சைபோ) மூலம் கிடைத்துள்ளது.

திணைக்களத்தின் கருமங்கள்

(i) திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்ற வயதுவந்தவர்கள், இளைஞர் மற்றும் சிறுபராய குற்றவாளிகளின் வாழ்க்கையை சீர்செய்து புனருத்தாபனம் செய்தல்

(ii) தண்டனைச் சட்டக்கோவையின் பிரகாரம் குற்றமாகக் கருதுகிற ஒன்றைச் செய்யாத போதிலும் பெற்றோர்களுக்கு கீழ்ப்படியாத, பாடசாலையில் இருந்து ஓடிச்செல்லும் முரண்டு சமூகவிரோதி வேலைகளைச் செய்யும் மாணவர்ஒவரை நல்ல வழிக்கு கொண்டு வருதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) அநாதைகள், கைவிடப்பட்ட, உதவியற்ற, குரூரமான செயல்களுக்கு இரையாகிய மற்றும் அதிக இடர்களுக்கும், துஷ்பிரயோகங்களுக்கு முகம்கொடுத்து இருக்கிற சிறுவர்களை பாதுகாத்துக் கொள்ளல்.

(iv) சிறுவர் நலன்புரிச் சேவையில் ஈடுபட்டுள்ள தன்ஆர்வ அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பான விசாரணைகள், கண்காணித்தல் மற்றும் உதவி வழங்குதல் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் பின்பு மேல் காட்டப்பட்டுள்ள திணைக்கள கருமங்களை நிறைவேற்றுவதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனம் மற்றும் சேவைகள் மாகாண நன்நடத்தை ஆணையாளர் அலுவலர்களுக்கு கையளிக்கப்பட்டது.

மத்திய அரசாங்கத்தின் கீழ் நடைபெறும் நன்நடத்தை சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மூலம் திணைக்களத்திற்கு கருமங்களுக்கு தொடர்பான கொள்கையைத் தயாரித்தல், சட்டத்தை இயற்றுதல் வெளிநாட்டு சாதிப் பெயர்களை இடுதல் போன்ற வேலைகள் வெளிநாட்டு அமைப்புகளிடம் இருந்து பெறும் உபகரணங்கள் மற்றும் பொருட்கள் திணைக்கள நிறுவனங்களுக்கிடையில் பகிர்ந்து கொள்ளல் அர்ப்பணிப்பு பெற்றோர் உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல் செவன உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல் பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளைப் பாடசாலைக்குச் சேர்த்துக் கொள்ளல் விபத்துக்களிலும் இடர்களிலும் துன்பத்துக்குள்ளான சிறார்களுக்கு உதவியளித்தல் மாகாண உத்தியோகத்தர்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற சேவைகளை நேரடியாகச் செயற்படுத்துவதுடன் அத்துடன் மாகாண ஆணையாளர் அலுவலகத்துடன் கூட்டிணைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளைத் தயாரித்தலும் நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதான அலுவலகம்

நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களம்

இலக்கம் 150 ஏ.எல்.எச்.பி. கட்டிடம்

நாவல வீதி, நுகேகொட

தொலைபேசி :- 011-2853596- 011-2853549

தொலைநகல் :- 011-2852393

## கடமைகளைச் செய்வோம் உரிமைகளைப் பாதுகாப்போம்

சிறுவர் உரிமைகளைப் பற்றிப் பேசப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சிறுவர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகளையும் மறக்கக்கூடாது. சிறுவருக்குள்ள உரிமைகள் போன்று மற்றைய சிறுவர்கள் மற்றும் வயதுவந்தவர்களிடம் சிறுவருக்குரிய கடமைகளையும் பொறுப்புக்களையும் கைவிடமுடியாது. இதனை இலகுவான உதாரணத்தினால் விளக்குவதாய் இருந்தால் எல்லா சிறுவர்களுக்கும் உளம் சார்ந்த மற்றும் உடல்சார்ந்த தண்டனைகளிலிருந்து தவிர்த்து இருக்கும் உரிமை உண்டு. எப்படியிருந்தபோதிலும் அத்துடன் பெற்றோர்கள் ஆசிரியர்கள் மற்றும் வயதுவந்தவர்களை கௌரவப்படுத்தல் சிறுவனின் கடமையும் பொறுப்புமாகும். யாராவது ஒரு நபர் தனது கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றாமல் உரிமைகளில் உதவியைப் பெறுதல் பலனற்ற செய்கையாகும். பாடசாலையில், வீட்டில், சமூகத்தில் முதலாவதாக தனது கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றி, இரண்டாவதாக உரிமைகள், பற்றிக் கவனமெடுப்பதற்கு எல்லா சிறுவர்களும் மனதில் கொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய விடயங்கள்

* யாராவதொருவர் சட்டத்தின் முன்பாக பராயமடைந்தவர் எனக் கொள்ளப்படுவராயின் அவர் 18 வயதைப் பூர்த்தி செய்ததின் பின்னரேயாகும்.

* ஒரு பெண்ணுக்கு அல்லது ஒரு ஆணுக்கு திருமணம் செய்து கொள்வதற்கான குறைந்த வயது 18 ஆகும். (ஆனால் முஸ்லிம் சட்டத்திற்கு உட்பட்ட நபர்களுக்கு இது பொருத்தமற்றதாகும்)

* 16வயதுக்குக் குறைவான பெண்பிள்ளையுடன் அவரின் விருப்பத்துடனும் பாலியல் தொடர்பு கொள்ளும் ஒருவர் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் பாரதூரமான தண்டனை பெறக்கூடிய குற்றத்தைச் செய்தவராகிறார்.

* 14 வயதிற்குக் குறைவான சிறுவனொருவனை வேலையில் ஈடுபடுத்தும் ஒருவர் சட்டத்தின் பிரகாரம் குற்றப்பணம் செலுத்துவதற்கும், சிறைத்தண்டனை அனுபவிப்பதற்கும் அல்லது இரண்டிற்கும் உள்ளடக்கப்படவேண்டியவராகிறார்.

* 14 வயதிலிருந்து 18 வயதுவரையில் ஆன வயது எல்லைக்குள் சிறுவர்களை ஒரு குறிப்பிட்டளவு தொழில்செய்வதற்காக மட்டும் வேலையில் ஈடுபடுத்திக் கொள்ளலாம். இப்படியான சந்தர்ப்பங்களில் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்கள் மற்றும் இளைஞர்களை சேவையில் ஈடுபடுத்துவது பற்றிய சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

14 வயதிலிருந்து 18 வயதுவரை சிறுவர்களை இந்தவிதிகளை மீறும்படியாக சேவையில் ஈடுபடுத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தின் பிரகாரம் தண்டனை பெறக்கூடிய குற்றமாகும்.

* 14 வயதிற்கு குறைந்த பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புதல் கட்டாயமானதுடன் இதற்காக 1997 ஆம் ஆண்டின் 100/35 இலக்கம் கொண்ட அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகை பொருத்தமாகும்.

* பாடசாலைச் சிறார்களுக்கு உடல்சார்ந்த தண்டனையளித்தல் கல்வி அமைச்சின் 2005/17 ஆ ம அ சு ற் று நி ரு ப த் தி னா ல் தடைசெய்யப்பட்டுள்ளது.

* 2005 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க உடல்சார்ந்த தண்டனை (நீக்கும்) சட்டத்தின் Corporal Punishment (Repeal) Act No 23 of 2005 மூலம் கசையடி தொடுக்கும் தண்டனை இலங்கை சட்டவமைப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய உடன்படிக்கை (CRC)

ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய உடன்படிக்கை என்பது சகல சிறுவர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகள் பற்றிய குறிப்பிட்டுள்ள சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொண்டுள்ள ஆவணமாகும். இலங்கை உட்பட உலகத்தின் சகல நாடுகளும் இதை ஏற்றுக்கொண்டிருப்பதுடன் நாடுகள் சார்ந்த சட்டங்களை தயாரிப்பதில் இந்த உடன்படிக்கைக்கு தொண்ணூற்றேழு வயதாகிறதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கே குறிப்பிட்டு இருப்பது யாதெனில் சிறுவர் உரிமைகள் பற்றிய உடன்படிக்கையின் இலகுவான மொழிபெயர்ப்பாகும்.

1. சிறுவர் பற்றிய வரைவிலக்கணம்

18 வயதிற்கு உட்பட்ட சகலரும் சிறுவனாகக் கொள்ளப்படும்.அவர்களுக்கு இந்த உடன்படிக்கையில் குறிப்பிட்ட சகல உரிமைகளும் உரித்தாக்கப்படவேண்டும்.

2. மாற்றஞ் செய்யாதிருத்தல்

சிறுவர் என்பது எந்தஒருவராக இருந்தாலும், எந்த வயதுக் கூட்டத்திற்கு உட்பட்டவராயினும், எந்த ஒரு நோய்வாய்ப்பட்டிருந்தபோதிலும், எந்த நிறத்தையுடையவராக இருந்தபோதிலும் அப்படியான சகலருக்கும் இந்த உரிமைகள் உரித்தானதாகும். சகல சிறுவர்களுக்கும் வேறுபாடு காட்டப்படாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் கருமங்கள் ஆற்றுவதற்கு அரசாங்கத்தினால் பார்த்துக்கொள்ளப்படுவதுடன் சிறுவர் உரிமைகள் மக்களிடையே பரவுவதற்கு கருமம் ஆற்றுதலும் அரசாங்கத்தின் பிரபல பொறுப்புக்களாகும்.

3. உடன்படிக்கையைச் செற்படுத்துதல்

சிறுவர் தொடர்பாக கருமமாற்றும்பொழுதும் அச்சிறுவன் பற்றி எடுக்கும் தீர்மானங்களுக்கு சிறுவரின் உச்சப்படியான நன்மையைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

4. உடன்படிக்கையைச் செயற்படுத்துதல்

உடன்படிக்கைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள சகல உரிமைகளையும் செயற்படுத்தப்படுவதற்கு அரசாங்கத்தினால் கூடியளவு சகல காரியங்களும் செய்யப்படவேண்டும்.

5. பெற்றோர்களின் வழிகாட்டுதல் மற்றும் சிறுவரின் விருத்தி சிறுவருக்கு தேவையான வழிகாட்டுதலை ஒழுங்கு செய்வதில் குடும்பத்துக்குரிய பொறுப்புக்களும், பெற்றோர்களின் உரிமைகளுக்கும் பொறுப்புகளுக்கும் அரசாங்கம் கௌரவமளிக்கப்படவேண்டும்.

6. வாழ்க்கையைக் கொண்டு செல்லுதல் மற்றும் அபிவிருத்தி வாழ்வதற்கு உரிமையுள்ளது என்று சகலரும் ஏற்றுக் கொள்ளவேண்டும். சிறுவரின் வாழ்க்கை மற்றும் அபிவிருத்தியை நன்றாகப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

7. பெயர் மற்றும் தேசியத்துவம்

பிறப்பிலிருந்து பெயர் மற்றும் இனத்திற்காக உரிமையைப் பெறுவதற்கு சகல சிறுவர்களுக்கும் உரிமையுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஆளடையாளத்தைப் பாதுகாத்தல்

சிறுவரின் ஆளடையாளத்தைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் கட்டுப்பட்டுள்ளது. ஆளடையாள இல்லாதவிடத்து தேவையான எந்த நேரத்திலும் பெயர் இனம் மற்றும் குடும்பத் தொடர்புகளை சமர்ப்பித்து அதை மீண்டும் ஸ்தாபிப்பதற்கு அரசாங்கம் கட்டுப்பட்டுள்ளது.

9. பெற்றோர்களிடமிருந்து பிரிதல்

சிறுவர்களின் ஆகக்கூடிய நன்மைக்காக மாத்திரம் (அதாவது பெற்றோர்களினால் சிறுவர்களுக்கு ஒருமுறையற்ற செயல் நடந்து இருந்தால் அல்லது அவர்களைப் பற்றி கவனிக்காது விடப்பட்டிருந்தால்) தவிர அவர்களை பெற்றோர்களிடமிருந்து பிரித்துக் கொள்ளக்கூடாது. பெற்றோர்கள் வேறாக வாழ்வதற்கு தீர்மானம் எடுத்துக்கொண்டால் சிறுவன், அவர்களுள் ஒருவருடன் வசிப்பதற்கு ஏற்படுகிறது. ஆனால் தாய் அல்லது தந்தையுடன் இலுகுவான முறையில் தொடர்புகளைக் கொண்டு செல்வதற்கு சிறுவருக்கு உரிமையுண்டு.

10. குடும்பமாக மீண்டும் ஒன்றுசேருதல்

தான் விரும்பிய நாட்டில் வசிப்பதற்கும், தன்னுடைய குடும்பத்துடன் மீண்டும் ஒன்றுசேர்வதற்கும் தன்னுடைய நாட்டிற்கு மீண்டும் வருவதற்கும் சிறுவனுக்கும் பெற்றோர்களுக்கும் உரிமையுண்டு.

11. சிறுவர்களைக் கடத்திச் செல்லுதல்

பெற்றோர்கள் அல்லது மூன்றாம் தரப்பினரால் சிறுவரைக் கடத்திச் செல்லுவதற்கு கருமம் ஆற்றுவதாய் இருந்தால் அல்லது பலாத்காரமாக தடுத்துவைப்பதற்கு முயற்சி செய்வதாயிருந்தால் அதனைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஆளடையாளத்தைப் பாதுகாத்தல்

சிறுவரின் ஆளடையாளத்தைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் கட்டுப்பட்டுள்ளது. ஆளடையாளம் இல்லாதவிடத்து தேவையான எந்த நேரத்திலும் பெயர் இனம் மற்றும் குடும்பத் தொடர்புகளைச் சமர்ப்பித்து அதை மீண்டும் ஸ்தாபிப்பதற்கும் அரசாங்கம் கட்டுப்பட்டுள்ளது.

9. பெற்றோர்களிடமிருந்து பிரிதல்

சிறுவர்களின் ஆகக்கூடிய நன்மைக்காக மாத்திரம் (அதாவது பெற்றோர்களினால் சிறுவர்களுக்கு ஒருமுறையற்ற செயல் நடந்து இருந்தால் அல்லது அவர்களைப் பற்றி கவனிக்காது விடப்பட்டிருந்தால்) தவிர அவர்களை பெற்றோர்களிடமிருந்து பிரித்துக் கொள்ளக்கூடாது. பெற்றோர்கள் வேறாக வாழ்வதற்கு தீர்மானம் எடுத்துக்கொண்டால் சிறுவன், அவர்களுள் ஒருவருடன் வசிப்பதற்கு ஏற்படுகிறது. ஆனால் தாய் அல்லது தந்தையுடன் இலுகுவான முறையில் தொடர்புகளைக் கொண்டு செல்வதற்கு சிறுவருக்கு உரிமையுண்டு.

10. குடும்பமாக மீண்டும் ஒன்றுசேருதல்

தான் விரும்பிய நாட்டில் வசிப்பதற்கும், தன்னுடைய குடும்பத்துடன் மீண்டும் ஒன்றுசேர்வதற்கும் தன்னுடைய நாட்டிற்கு மீண்டும் வருவதற்கும் சிறுவனுக்கும் பெற்றோர்களுக்கும் உரிமையுண்டு.

11. சிறுவர்களைக் கடத்திச் செல்லுதல்

பெற்றோர்கள் அல்லது மூன்றாம் தரப்பினரால் சிறுவரைக் கடத்திச் செல்லுவதற்கு கருமம் ஆற்றுவதாய் இருந்தால் அல்லது பலாத்காரமாக தடுத்துவைப்பதற்கு முயற்சி செய்வதாயிருந்தால் அதனைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கையை

எடுக்கவேண்டியிருப்பதுடன் கடத்திச் செல்லப்பட்ட சிறுவரை மீண்டும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

12. சிறுவனின் எண்ணம்

எந்த ஒரு விதத்திலாவது சிறுவரைப் பாதிக்கும் தீர்மானம் ஒன்றினைப் பெற்றோர்கள் அல்லது பராயமடைந்தவர்களினால் எடுக்கும்பொழுது தன்னுடைய எண்ணத்தை வெளிப்படுத்துவதற்கு சிறுவனுக்கு உரிமையுள்ளதுடன் அந்த எண்ணத்தை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்.

13. சுதந்திரமாக எண்ணங்களை வெளிப்படுத்துதல்

சிலசில தகவல்களை தேடி அறிந்துகொண்டு அவைபற்றி தான் சிந்திக்கும் விடயங்களைக் கூறுவதற்கு சிறுவனுக்கு உரிமையுண்டு. மற்றவர்களுடைய உரிமைகளுக்கு தீங்கு ஏற்படாத வகையில் அந்த எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கும் சிறுவனுக்கு உரிமையுண்டு.

14. சுதந்திரமாகச் சிந்தித்தல் மற்றும் சமயத்தை அனுஷ்டித்தல்

தான் விரும்பிய விதமாக சிந்திப்பதற்கும் சமயத்தை அனுஷ்டிப்பதற்கும் சிறுவர்களுக்கு உரிமையுண்டு. இதில் பெற்றோரின் வழிகாட்டும் தன்மையை பெற்றுக்கொள்ளவேண்டியதுடன் நாட்டில் நிலவும் சட்டத்தின் பிரகாரம் இந்தச் சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டும்.

15. ஆட்களுடன் ஒன்றுசேரும் சுதந்திரம்

மற்றைய சிறுவர்களைச் சந்தித்து நட்பு, சிநேகிதத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு உரிமையுண்டு. மற்றவர்களின் சுதந்திரத்திற்கு தடையில்லாத முறையில் சங்கங்களை அமைத்துக் கொள்வதற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு உரிமையுண்டு.

16. தனித்துவத்தைப் பாதுகாத்தல்

சகல சிறுவர்களுக்கும் தனிப்பட்ட வாழ்க்கைக்கு உரிமையுள்ளது. தன்னுடைய தனித்துவம், குடும்பம், வீடு, கடிதக் கோவை தொடர்பாக மற்றைய ஆட்களின குறுக்கீடின்றி கருமம் ஆற்றுவதற்கு உரிமையுண்டு.

17. உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்

உள்நாடு சார்ந்ததும் வெளிநாடு சார்ந்ததுமான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு சிறுவர்களுக்கு ஒழுங்கு செய்து தருதல் அரசாங்கத்தின் பொறுப்பாகும். இவ்விடத்தில் அவர்களுடைய நன்மைகளுக்கு ஏதுவானதும் அவர்களுடைய கலாச்சார மதிப்புகளுக்கு தீங்கு விளைவிக்காத வகையிலான தகவல்களை சிறுவர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

18. பெற்றோர்களின பொறுப்புக்கள்

தாய் தந்தையர் இருவரும் சிறுவனின் வளர்ச்சியையும் விருத்தியையும் பற்றி சமமான பொறுப்புக்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர்கள் எப்பொழுதும் சிறுவனின் நன்மையின் பொருட்டாக செயற்பட வேண்டியதுடன் இதற்காக அரசாங்கம் அவர்களுக்கு உதவியளிக்க வேண்டும்.

19. துஷ்பிரயோகங்களிலிருந்தும் கவனிப்பாரற்ற நிலையிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளல்

துஷ்பிரயோகங்களிலிருந்தும் கவனிப்பாரற்ற நிலையிலிருந்தும் பாதுகாத்துக் கொள்வதற்கு சிறுவர்களுக்கு உரிமை உண்டு. பெற்றோர்களுக்கும் பாதுகாத்துக் கொள்பவர்களுக்கும், சிறுவர்களுக்கு இம்சை செய்வதற்கு ஒருவித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையும் இல்லை. துஷ்பிரயோகங்களுக்கு உட்படாத விதத்தில் சிறுவர்களுக்கு பாதுகாப்பளிப்பதற்கும் அப்படியே துஷ்பிரயோகங்களுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

20. குடும்பம் இல்லாத சிறுவர்களுக்கு பாதுகாவல்

சிறுவர்களுக்கு பெற்றோர்கள் இல்லையெனில் அல்லது அவனுக்கு / அவளுக்கு தங்கள் பெற்றோர்களுடன் இருத்தல் பாதுகாப்பின்றி இருக்குமானால் அவனுக்கு / அவளுக்கு விசேட பாதுகாப்பும் உதவியும் பெற்றுக்கொள்வதற்கு உரிமைஉண்டு.

21. தத்தெடுத்து பிள்ளைகளை வளர்த்தல்

சிறுவன் ஒருவனை தத்தெடுத்து வளர்ப்பதாய் இருந்தால் அது சட்டபூர்வமானதாகவும் சிறுவனின் ஆகக்கூடிய நன்மைக்கு காரணமானதாக நடத்தப்படவேண்டும்.

22. அகதிகளாகும் சிறுவர்கள்

பாதுகாப்பைக் கோரி ஒரு சிறுவனுக்கு தன்னுடைய வீடு அல்லது நாட்டை விட்டுப் போவதற்கு ஏற்படுமானால் அப்படியான அகதிச் சிறுவர்களுக்கு விசேட பாதுகாப்பைப் பெறுவதற்கு உரிமையுண்டு.

23. ஊனமுற்ற சிறுவர்கள்

சிறுவர் உள்ளத்தாலும் அல்லது உடலாலும் ஊனமுற்று இருப்பார்களாயின் மற்றைய சிறுவர்களைப் போல வளருவதற்கும், விசேட பாதுகாப்பும் கல்வியறிவைப் பெற்றுக் கொள்வதற்கும் கூடியளவு சுயாதீனமாக இருப்பதற்கும் செயற்பாடமைந்த பூரண வாழ்வைக் கொண்டு செல்வதற்கும் உரிமை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. சுகாதாரம் மற்றும் சுகாதார சேவை

நன்றான சுகாதாரத்துடன் இருப்பதற்கு உரிமையுண்டு சுகாதார சேவைகளைப் பெறுவதற்கும் பொதுச் சுகாதாரம் பற்றிய கல்வியைப் பெறுவதற்கும் சிறுவர்களுக்கு உரிமை உண்டு.

25. நிறுவனத்திலுள்ள சிறுவர்கள் பற்றி கண்காணிப்பு

சிறுவர் பாதுகாவல், பாதுகாப்பு மற்றும் சிகிச்சைக்காக அவன் / அவள் ஏதேனுமொரு இடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட இடத்தைப் பற்றி நிரந்தரமாக கண்காணிப்பச் செய்யப்படவேண்டும்.

26. சமூகப் பாதுகாப்பு

தன்னுடைய நாட்டில் நிலவும் சமூகப் பாதுகாப்பு வேலைத்திட்டங்களிலிருந்து நன்மைகளைப் பெறும் உரிமை சிறுவர்களுக்கு உண்டு.

27. வாழ்வதற்கான நிலைமை

சிறந்தவொரு வாழ்க்கை நிலைமைக்கு உரித்து கோருவதற்கான உரிமைகள் சகல சிறுவர்களுக்கும் உண்டு. சிறுவருக்கு ஆடை, உடுபுடவைகள், மற்றும் வசிப்பதற்கு ஒரு இடத்தைப் பெற்றுக் கொடுப்பது பெற்றோர்களின் பொறுப்பாகும். பெற்றோர்களுக்கு இதனைச் செய்வதற்கு கஷ்டமான சந்தர்ப்பங்களில் அரசாங்கம் இதற்கு மத்தியஸ்தம் வகித்து உதவிகளைச் செய்துகொடுக்க வேண்டும்.

28. கல்வி

கல்வியைப் பெறுவதற்கு சகல சிறுவர்களுக்கும் உரிமை உண்டு. குறைந்தளவில் அடிப்படைக் கல்வியை கட்டாயப்படுத்துவற்கும் அது இலவசமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்திக் கொடுப்பதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

29. கல்வியின் நோக்கம்

கல்வியின் நோக்கம் யாதெனில் சிறுவனின் ஆளுமை, திறமை மற்றும் உளரீதியிலும், உடல்ரீதியிலுமான இயலும் தன்மை பரிபூரணமான முறையில பொறுப்புடன், சமாதானமுறையில் , சுதந்திர சமூகத்தில் வாழ்வதற்கும், மற்றைய நபர்களுடைய உரிமைகளை விளங்கிக்கொண்டு சூழலுக்கு மதிப்பளித்து வாழ்வதற்கும் கல்வியின் மூலம் சிறுவர்கள் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

30. சிறுபான்மையினருக்குச் சொந்தமான சிறுவர்கள்

சிறுபான்மையினத்திற்குச் சொந்தமான சிறுவர்களுக்கு தங்களுடைய கலாச்சாரத்தை அனுபவிப்பதற்கும் தங்களுடைய சமயத்தை அனுஷ்டிப்பதற்கும் தன்னுடைய மொழியைப் பாவிப்பதற்கும் உரிமை உண்டு.

31. விளையாட்டு, பொழுதுபோக்கு சார்ந்த மற்றும் கலாச்சார வேலைகள்

விளையாடுவதற்கு, விநோதமாக இருப்பதற்கு, கலாச்சார மற்றும் அழகுக்கலைகளின் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் சிறுவர்களுக்கு உரிமை உண்டு.

32. சிறுவர்களின் உழைப்பு

தமது கல்விக்கு, சுகாதாரத்திற்கு அல்லது விருத்திக்கு தீங்கு விளைவிக்கும் தொழிலிருந்தும் நிலைமைகளிலிருந்தும் பாதுகாப்பைப் பெறுவதற்கு சிறுவர்களுக்கு உரிமை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. போதைவஸ்து தொல்லைகள்

சட்டபூர்வமற்ற போதைவஸ்துக்களின் பாவனை மற்றும் போதைவஸ்து உற்பத்தியையும் வினியோகத்தையும் தடுப்பதற்கு சிறுவர்களுக்கு உரிமை உண்டு.

34. பாலியல் துஷ்பிரயோகம்

பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் தொல்லைகளிலிருந்து பாதுகாப்பதற்கும் தொழில் ரீதியாகச் செய்யும் பாலியல் நடவடிக்கைகள் மற்றும் நடத்தை கெட்ட வெளியீடுகளிலிருந்தும் பாதுகாப்பதற்கு சிறார்களுக்கு உரிமை உண்டு.

35. விற்பனை செய்தல் மற்றும் கடத்திச் செல்லுதல்

சிறுவர்களை கடத்திச் செல்லுதல் மற்றும் விற்பனை செய்வதைத் தடுப்பதற்கு எடுக்கக்கூடிய சகல நடவடிக்கைகளும் அரசாங்கத்தினால் எடுக்கப்படவேண்டும். சிறுவர்களை விற்பனை செய்தல், விலைமாதர் தொழிலில் ஈடுபடுத்துதல் மற்றும் நடத்தை கெட்ட வெளியீடுகளுக்கு தொடர்புபடுத்துவது பற்றிய மேலதிக உடன்பாடுகளை செயற்படுத்துவதுடன் குற்றவாளிக்கெதிராக கடுமையான சட்டங்களை செயற்படுத்துவதற்கும், தொல்லைகளுக்கு உள்ளானவர்களுக்கு பாதுகாப்பினை வழங்குவதற்கும் சட்டம் சார்ந்த ஏற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

36. மற்றைய விதங்களிலான துஷ்பிரயோகம்

32 ஆம் பிரிவு தொடக்கம் 35 ஆம் பிரிவு வரையிலான குறிப்பிடப்படாத மற்றைய சகல விதங்களிலான துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களை பாதுகாத்துக் கொள்வது அரசாங்கத்துக்கு உரிய பொறுப்பாகும்.

37. வதை இம்சைகளைப் புரிதல் மற்றும் சுதந்திரத்தை பறித்தெடுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு வதை இம்சைகளை் புரிதல், கடுமையாக கவனித்தல் தண்டனை அளித்தல், வாழ்நாள் முழுவதும் சிறைத்தண்டனைக்கு கட்டளையிடல், அல்லது மரண தண்டனைக்குள்ளாக்குதல், சட்டபூர்வமற்றமுறையில் கைதுசெய்தல் அல்லது அவர்களுடைய சுதந்திரத்தைப் பறித்தெடுத்தல் போன்றவற்றைச் செய்யக்கூடாது. சட்டபூர்வமான முறையில் சுதந்திரத்தை வரையறை செய்யும் சிறுவருக்கு உரிய முறையில் தன்னைக் கவனிப்பதற்கு உரிமையுள்ளதுடன் தடுத்து வைத்திருக்கும் பராயமடைந்தவர்களிடமிருந்து பிரிந்து இருப்பதற்கும் தனது குடும்பத்துடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும் சட்டம்சார்ந்த அல்லது வேறு உதவிகளைப் பெறவதற்கும் உரிமை உண்டு.

38. ஆயுதங்களைத் தாங்கிய தொல்லைகள்

யுத்தம் சார்ந்த காலகட்டத்தில் பாதுகாப்பைப் பெறுவதற்கு சிறுவர்களுக்கு உரிமை உண்டு. 16 வயதுக்கு குறைந்த யாராவதொரு சிறுவனை யுத்தத்திற்கு தொடர்புபடுத்துதல் அல்லது ஆயுதப்படைக்குச் சேர்த்துக் கொள்ளக்கூடாது. யுத்தத்தினால் துன்பத்துக்குள்ளாகிய சிறுவர்களுக்கு பாதுகாப்பு அரசாங்கத்தினால் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

சிறுவர்களை யுத்தத் தொல்லைகளுக்கு தொடர்புபடுத்திக் கொள்வது பற்றிய மேலதிக உடன்பாடு 2000 ஆம் ஆண்டின் மே மாதத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. அந்த உடன்பாட்டின் பிரகாரம் சிறுவர்களை யுத்தம் போன்ற தொல்லைகளுக்கு கலந்துகொள்ள வைப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு உரிமையுண்டு.

16. தனித்துவத்தைப் பாதுகாத்தல்

சகல சிறுவர்களுக்கும் தனிப்பட்ட வாழ்க்கைக்கு உரிமையுள்ளது. தன்னுடைய தனித்துவம், குடும்பம், வீடு, கடிதக் கோவை தொடர்பாக மற்றைய ஆட்களின குறுக்கீடின்றி கருமம் ஆற்றுவதற்கு உரிமையுண்டு.

17. உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்

உள்நாடு சார்ந்ததும் வெளிநாடு சார்ந்ததுமான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு சிறுவர்களுக்கு ஒழுங்கு செய்து தருதல் அரசாங்கத்தின் பொறுப்பாகும். இவ்விடத்தில் அவர்களுடைய நன்மைகளுக்கு ஏதுவானதும் அவர்களுடைய கலாச்சார மதிப்புகளுக்கு தீங்கு விளைவிக்காத வகையிலான தகவல்களை சிறுவர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

18. பெற்றோர்களின பொறுப்புக்கள்

தாய் தந்தையர் இருவரும் சிறுவனின் வளர்ச்சியையும் விருத்தியையும் பற்றி சமமான பொறுப்புக்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர்கள் எப்பொழுதும் சிறுவனின் நன்மையின் பொருட்டாக செயற்பட வேண்டியதுடன் இதற்காக அரசாங்கம் அவர்களுக்கு உதவியளிக்க வேண்டும்.

19. துஷ்பிரயோகங்களிலிருந்தும் கவனிப்பாரற்ற நிலையிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளல்

துஷ்பிரயோகங்களிலிருந்தும் கவனிப்பாரற்ற நிலையிலிருந்தும் பாதுகாத்துக் கொள்வதற்கு சிறுவர்களுக்கு உரிமை உண்டு. பெற்றோர்களுக்கும் பாதுகாத்துக் கொள்பவர்களுக்கும், சிறுவர்களுக்கு இம்சை செய்வதற்கு ஒருவித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையும் இல்லை. துஷ்பிரயோகங்களுக்கு உட்படாத விதத்தில் சிறுவர்களுக்கு பாதுகாப்பளிப்பதற்கும் அப்படியே துஷ்பிரயோகங்களுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

20. குடும்பம் இல்லாத சிறுவர்களுக்கு பாதுகாவல்

சிறுவர்களுக்கு பெற்றோர்கள் இல்லையெனில் அல்லது அவனுக்கு / அவளுக்கு தங்கள் பெற்றோர்களுடன் இருத்தல் பாதுகாப்பின்றி இருக்குமானால் அவனுக்கு / அவளுக்கு விசேட பாதுகாப்பும் உதவியும் பெற்றுக்கொள்வதற்கு உரிமைஉண்டு.

21. தத்தெடுத்து பிள்ளைகளை வளர்த்தல்

சிறுவன் ஒருவனை தத்தெடுத்து வளர்ப்பதாய் இருந்தால் அது சட்டபூர்வமானதாகவும் சிறுவனின் ஆகக்கூடிய நன்மைக்கு காரணமானதாக நடத்தப்படவேண்டும்.

22. அகதிகளாகும் சிறுவர்கள்

பாதுகாப்பைக் கோரி ஒரு சிறுவனுக்கு தன்னுடைய வீடு அல்லது நாட்டை விட்டுப் போவதற்கு ஏற்படுமானால் அப்படியான அகதிச் சிறுவர்களுக்கு விசேட பாதுகாப்பைப் பெறுவதற்கு உரிமையுண்டு.

23. ஊனமுற்ற சிறுவர்கள்

சிறுவர் உள்ளத்தாலும் அல்லது உடலாலும் ஊனமுற்று இருப்பார்களாயின் மற்றைய சிறுவர்களைப் போல வளருவதற்கும், விசேட பாதுகாப்பும் கல்வியறிவைப் பெற்றுக் கொள்வதற்கும் கூடியளவு சுயாதீனமாக இருப்பதற்கும் செயற்பாடமைந்த பூரண வாழ்வைக் கொண்டு செல்வதற்கும் உரிமை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. சுகாதாரம் மற்றும் சுகாதார சேவை

நன்றான சுகாதாரத்துடன் இருப்பதற்கு உரிமையுண்டு சுகாதார சேவைகளைப் பெறுவதற்கும் பொதுச் சுகாதாரம் பற்றிய கல்வியைப் பெறுவதற்கும் சிறுவர்களுக்கு உரிமை உண்டு.

25. நிறுவனத்திலுள்ள சிறுவர்கள் பற்றி கண்காணிப்பு

சிறுவர் பாதுகாவல், பாதுகாப்பு மற்றும் சிகிச்சைக்காக அவன் / அவள் ஏதேனுமொரு இடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட இடத்தைப் பற்றி நிரந்தரமாக கண்காணிப்பச் செய்யப்படவேண்டும்.

26. சமூகப் பாதுகாப்பு

தன்னுடைய நாட்டில் நிலவும் சமூகப் பாதுகாப்பு வேலைத்திட்டங்களிலிருந்து நன்மைகளைப் பெறும் உரிமை சிறுவர்களுக்கு உண்டு.

27. வாழ்வதற்கான நிலைமை

சிறந்தவொரு வாழ்க்கை நிலைமைக்கு உரித்து கோருவதற்கான உரிமைகள் சகல சிறுவர்களுக்கும் உண்டு. சிறுவருக்கு ஆடை, உடுபுடவைகள், மற்றும் வசிப்பதற்கு ஒரு இடத்தைப் பெற்றுக் கொடுப்பது பெற்றோர்களின் பொறுப்பாகும். பெற்றோர்களுக்கு இதனைச் செய்வதற்கு கஷ்டமான சந்தர்ப்பங்களில் அரசாங்கம் இதற்கு மத்தியஸ்தம் வகித்து உதவிகளைச் செய்துகொடுக்க வேண்டும்.

28. கல்வி

கல்வியைப் பெறுவதற்கு சகல சிறுவர்களுக்கும் உரிமை உண்டு. குறைந்தளவில் அடிப்படைக் கல்வியை கட்டாயப்படுத்துவற்கும் அது இலவசமாகப்

பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்திக் கொடுப்பதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

29. கல்வியின் நோக்கம்

கல்வியின் நோக்கம் யாதெனில் சிறுவனின் ஆளுமை, திறமை மற்றும் உளரீதியிலும், உடல்ரீதியிலுமான இயலும் தன்மை பரிபூரணமான முறையில் பொறுப்புடன், சமாதானமுறையில் , சுதந்திர சமூகத்தில் வாழ்வதற்கும், மற்றைய நபர்களுடைய உரிமைகளை விளங்கிக்கொண்டு சூழலுக்கு மதிப்பளித்து வாழ்வதற்கும் கல்வியின் மூலம் சிறுவர்கள் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

30. சிறுபான்மையினருக்குச் சொந்தமான சிறுவர்கள்

சிறுபான்மையினத்திற்குச் சொந்தமான சிறுவர்களுக்கு தங்களுடைய கலாச்சாரத்தை அனுபவிப்பதற்கும் தங்களுடைய சமயத்தை அனுஷ்டிப்பதற்கும் தன்னுடைய மொழியைப் பாவிப்பதற்கும் உரிமை உண்டு.

31. விளையாட்டு, பொழுதுபோக்கு சார்ந்த மற்றும் கலாச்சார வேலைகள்

விளையாடுவதற்கு, விநோதமாக இருப்பதற்கு, கலாச்சார மற்றும் அழகுக்கலைகளின் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் சிறுவர்களுக்கு உரிமை உண்டு.

32. சிறுவர்களின் உழைப்பு

தமது கல்விக்கு, சுகாதாரத்திற்கு அல்லது விருத்திக்கு தீங்கு விளைவிக்கும் தொழிலிருந்தும் நிலைமைகளிலிருந்தும் பாதுகாப்பைப் பெறுவதற்கு சிறுவர்களுக்கு உரிமை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. போதைவஸ்து தொல்லைகள்

சட்டபூர்வமற்ற போதைவஸ்துக்களின் பாவனை மற்றும் போதைவஸ்து உற்பத்தியையும் வினியோகத்தையும் தடுப்பதற்கு சிறுவர்களுக்கு உரிமை உண்டு.

34. பாலியல் துஷ்பிரயோகம்

பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் தொல்லைகளிலிருந்து பாதுகாப்பதற்கும் தொழில் ரீதியாகச் செய்யும் பாலியல் நடவடிக்கைகள் மற்றும் நடத்தை கெட்ட வெளியீடுகளிலிருந்தும் பாதுகாப்பதற்கு சிறார்களுக்கு உரிமை உண்டு.

35. விற்பனை செய்தல் மற்றும் கடத்திச் செல்லுதல்

சிறுவர்களை கடத்திச் செல்லுதல் மற்றும் விற்பனை செய்வதைத் தடுப்பதற்கு எடுக்கக்கூடிய சகல நடவடிக்கைகளும் அரசாங்கத்தினால் எடுக்கப்படவேண்டும். சிறுவர்களை விற்பனை செய்தல், விலைமாதர் தொழிலில் ஈடுபடுத்துதல் மற்றும் நடத்தை கெட்ட வெளியீடுகளுக்கு தொடர்புபடுத்துவது பற்றிய மேலதிக உடன்பாடுகளை செயற்படுத்துவதுடன் குற்றவாளிக்கெதிராக கடுமையான சட்டங்களை செயற்படுத்துவதற்கும், தொல்லைகளுக்கு உள்ளானவர்களுக்கு பாதுகாப்பினை வழங்குவதற்கும் சட்டம் சார்ந்த ஏற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

36. மற்றைய விதங்களிலான துஷ்பிரயோகம்

32 ஆம் பிரிவு தொடக்கம் 35 ஆம் பிரிவு வரையிலான குறிப்பிடப்படாத மற்றைய சகல விதங்களிலான துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களை பாதுகாத்துக் கொள்வது அரசாங்கத்துக்கு உரிய பொறுப்பாகும்.

37. வதை இம்சைகளைப் புரிதல் மற்றும் சுதந்திரத்தை பறித்தெடுத்தல்

சிறுவர்களுக்கு வதை இம்சைகளை் புரிதல், கடுமையாக கவனித்தல் தண்டனை அளித்தல், வாழ்நாள் முழுவதும் சிறைத்தண்டனைக்கு கட்டளையிடல், அல்லது மரண தண்டனைக்குள்ளாக்குதல், சட்டபூர்வமற்றமுறையில் கைதுசெய்தல் அல்லது அவர்களுடைய சுதந்திரத்தைப் பறித்தெடுத்தல் போன்றவற்றைச் செய்யக்கூடாது. சட்டபூர்வமான முறையில் சுதந்திரத்தை வரையறை செய்யும் சிறுவருக்கு உரிய முறையில் தன்னைக் கவனிப்பதற்கு உரிமையுள்ளதுடன் தடுத்து வைத்திருக்கும் பராயமடைந்தவர்களிடமிருந்து பிரிந்து இருப்பதற்கும் தனது குடும்பத்துடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும் சட்டம்சார்ந்த அல்லது வேறு உதவிகளைப் பெறவதற்கும் உரிமை உண்டு.

38. ஆயுதங்களைத் தாங்கிய தொல்லைகள்

யுத்தம் சார்ந்த காலகட்டத்தில் பாதுகாப்பைப் பெறுவதற்கு சிறுவர்களுக்கு உரிமை உண்டு. 16 வயதுக்கு குறைந்த யாராவதொரு சிறுவனை யுத்தத்திற்கு தொடர்புபடுத்துதல் அல்லது ஆயுதப்படைக்குச் சேர்த்துக் கொள்ளக்கூடாது. யுத்தத்தினால் துன்பத்துக்குள்ளாகிய சிறுவர்களுக்கு பாதுகாப்பு அரசாங்கத்தினால் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

சிறுவர்களை யுத்தத் தொல்லைகளுக்கு தொடர்புபடுத்திக் கொள்வது பற்றிய மேலதிக உடன்பாடு 2000 ஆம் ஆண்டின் மே மாதத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. அந்த உடன்பாட்டின் பிரகாரம் சிறுவர்களை யுத்தம் போன்ற தொல்லைகளுக்கு கலந்துகொள்ள வைப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. புனர்வாழ்வு பாதுகாப்பு

யுத்தத்தினால் பாதிப்புக்குள்ளான சிறுவர்களை கவனிப்பாரற்ற தன்மையில் துஷ்பிரயோகங்களுக்கு அல்லது தொல்லைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தால் அதற்காக உரிய சிகிச்சைகளைப் பெற்றுக் கொடுத்தும் அதன்மூலம் அவர்களுக்கு சாதாரண வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்கு முடியுமான வகையில் அவர்களுக்கு வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது அரசாங்கத்தினால் செய்யப்படவேண்டும்.

40. சிறுவரும் சட்டமும்

சிறுவன் ஒருவன் குற்றம் செய்திருக்கிறார் என குற்றம் சாட்டப்படுமிடத்து சட்டம் சார்ந்த மற்றும் ஏனைய உதவிகளைப் பெறுவதற்கு அவனுக்கு / அவளுக்கு உரிமை உண்டு. சிறுவர்கள் ஒரு நிறுவனத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தால் வழக்கு விசாரணைகளுக்கு சிறுவர்களை கொண்டு செல்வதை, எப்பொழுதும், கூடியளவு, குறைக்க வேண்டும்.

41. நிலவும் உயர்ந்த ஸ்தானத்தில் பாதுகாத்தல்

நாட்டில் நிலவும் சட்டங்கள், இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கு மிகவும் மேலான மட்டத்தில் நிலவுமானால் அந்த உயர்ந்த மட்டத்திலான சட்டங்களும் சிறுவர்களுக்காக பொருந்தக் கூடியவாறு இருக்கவேண்டும்.

42. செயற்படுத்துதல்

சிறுவர், பராயமடைந்தோர் ஆகிய இருதரப்பினருக்கும் இந்த உடன்படிக்கையை அறிந்து கொள்வதற்கு ஒழுங்கு செய்வித்தல் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உடன்படிக்கையில் 54 பிரிவுகள் இருக்கின்றன. மற்றைய பிரிவுகளில் சொல்லப்படுவது யாதெனில் :-

* ஒவ்வொரு 5 வருடங்களுக்கொருமுறை உடன்படிக்கையைச் செயற்படுத்துதல் பற்றிய முன்னேற்றத்தை அரசாங்கங்களினால் அறிக்கை வெளியிடுதல் மற்றும்

* அரசாங்கத்தினால் தாங்கள் இந்த உடன்படிக்கைக்கு உள்ள கட்டுப்படும் தன்மையை எந்த வகையில் செயற்படுத்த வேண்டும் என்பதேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை

# சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

## 1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க

## தண்டனைச் சட்டக்கோவை

## திருத்தச்சட்டம்

(1995 ஒக்டோபர் மாதம் 31 ம் திகதி
அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

1995 ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி இலங்கைச் சனநாயக
சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப்பத்திரிகையின்
பகுதி II இற்கு மேலதிகமாக வெளியிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியம் : இங்கே காண்பிக்கப்படுவது பூரணம சட்டமின்றி சிறுவர் உரிமைகளுக்கு தொடர்பான பிரிவுகள் மாத்திரம் என நினைத்துக் கொள்ளுங்கள்

**1995 ம் ஆண்டின் 22 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்சட்டம்)**

தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால்

பின்வருமாறு சட்டமாக்கமப்படுவதாகும்.

1. இச்சட்டம் 1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துபின்னர் "முதன்மைச்சட்டவாக்கம்" *எனக்குறிப்பீடு செய்யப்படும்)* தண்டனைச் சட்டக்கோவையின் 286 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 286 அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்.

286 (அ) (1) கீழ்க்குறிப்பிடும் ஏதேனும் செயலைச் செய்துகொள்ளும் அதாவது

(அ) ஏதேனும் ஒற்றை ஏதேனும் ஆபாசமான அல்லது இழிவான கண்காட்சியில் அல்லது காட்சியில் தோன்றுவதற்கு அல்லது நடிப்பதற்கு அல்லது ஏதேனும் ஆபாசமான அல்லது இழிவான புகைப்படத்திற்கு அல்லது திரைப்படத்திற்கு தோற்ற நிலையை அமைவிப்பதற்கு உருநிலைப்படிவம் கொள்ளுவதற்கு என வாடகைக்கெடுக்கின்ற தொழிலுக்கமர்த்துகின்ற உதவுகின்ற தூண்டுகின்ற பயன்படுத்துகின்ற தூண்டுதல் அளிக்கின்ற அல்லது வலுக்கட்டாயப்படுத்துகின்ற அல்லது விற்பனை செய்கின்ற, அல்லது விநியோகிக்கின்ற அல்லது வேறு வகையில் வெளியிடுகின்ற அல்லது அத்தகைய ஏதேனும் புகைப்படத்தை அல்லது திரைப்படத்தைத் தம்மகத்தே வைத்திருக்கின்றது: அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) பிள்ளையொன்றின் பெற்றோராக, பாதுகாவலராக அல்லது அதனைக் கட்டுக்காப்பில் வைத்திருக்கின்ற ஆளொருவராக இருக்கையில் ஏதேனும் ஆபாசமான அல்லது இழிவான கண்காட்சியில் அல்லது காட்சியில் பங்குபற்ற அல்லது அதற்கு தோற்ற நிலையை அமைவிக்க அல்லது உருநிலைப்படிவம் கொள்ள அல்லது (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான ஏதேனும் அத்தகைய புகைப்படத்தில் அல்லது திரைப்படத்தில் தோற்றுவதற்கு அத்தகைய பிள்ளையை ஒழுங்குசெய்கிற அல்லது இடமளிக்கும் எந்தஒருவரை எடுக்கும் அல்லது எடுப்பதற்கு உதவியளிககும் எந்த ஒரு நபரும்

(இ) (i) பிள்ளையொன்றின் ஏதேனும் இழிவான புகைப்படம் ஒன்றை

(ii) அத்தகைய ஏதேனும் புகைப்படத்தை வினியோகிக்கிற அல்லது காண்பிக்கிற அத்தகைய ஏதேனும் புகைப்படங்கள் அடங்கிய ஏதேனும் வெளியீட்டை வினியோகிக்கிற அல்லது காண்பிக்கிற அல்லது

(iii) ஏதேனும் அத்தகைய புகைப்படத்தை அல்லது வெளியீட்டை வினியோகத்திற்கென அல்லது காண்பிப்பதற்கென தம்மகத்தே வைத்திருக்கின்ற அல்லது

(iv) ஏதேனும் அத்தகைய புகைப்படத்தை வெளியிடுகின்ற அல்லது வெளியிடச் செய்விக்கின்ற அல்லது விளம்பரதாரர் அல்லது விளம்பரத்தில் குறிப்பிடப்படுகின்ற, வினியோகிக்கின்ற செய்தியை எடுத்துரைக்கும் ஆற்றலுடைய ஏதேனும் விளம்பரத்தை வெளியிடுகின்ற அல்லது வெளியிடச் செய்விக்கின்ற அல்லது அத்தகைய ஏதேனும் புகைப்படத்தை அல்லது வெளியீட்டை வெளியிடுகின்ற அல்லது அவ்வாறு செய்ய முனைகின்ற

ஆளெவரும் சிறுவர்கள் சார்பில் ஆபாசமானவெளியீடு மற்றும் கண்காட்சி என்னும் தவறைப் புரிகின்றார் என்பதுடன் அவர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மீது இரண்டாண்டுகளுக்கு குறையாததும் பத்தாண்டுகளை விஞ்சாததுமானவொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்தண்டனையால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் தண்டிக்கவும்படலாம்.

(2) இப்பிரிவில்

"பிள்ளை" என்பது பதினெட்டு வயதுக்குக் குறைவான ஓர் ஆள் என்று பொருள்படும்.

அத்துடன்

"திரைப்படம்" என்பது ஏதேனும் விதமான கட்புல ஒளிப்பதிவையும் உள்ளடங்கும்.

3\. பிரிவு 308 என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்படுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 308 அ என்னும பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்

முதன்மைச் சட்டவாக்கத்தில் 308 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

"பிள்ளைகளைக் கொடுமைப்படுத்துதல்"

308 அ (1) பதினெட்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட எவரேனும் ஆளைக் கட்டுக்காப்பில், பொறுப்பில், அல்லது பராமரிப்பில் வைத்திருக்கும் எவரும் அத்தகைய ஆளை கண்பார்வைக்கு அல்லது செவிப்புலனுக்கு அல்லது அவயவத்திற்கு அல்லது உடலுறுப்பிற்கு ஊறு அல்லது கண்பார்வை இழப்பு அல்லது ஏதேனும் உளவியல் சீர்குலைவு உட்பட துயரத்தை அல்லது உடல்நலப் பாதிப்பை ஏற்படுத்தும் சாத்தியமுற்ற முறையொன்றில் வேண்டுமென்றே தாக்குகின்ற, துன்புறுத்த செய்விக்க கைவிடப்படுவிக்கச் செய்விக்கின்ற ஆள் எவரும் பிள்ளைகளைக் டுமைப்படுத்தல் என்னும் தவறைப் புரிகின்றார்.

(2) பிள்ளைகளைக் கொடுமைப்படுத்துதல் என்னும் தவறைப் புரிகின்ற ஆளெவரும் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்து ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் குற்றப்பணத்துடனும் தண்டிக்கப்படலாம். அத்துடன் எந்த ஆள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடாபில் தவறு செய்யப்பட்டதோ அந்த ஆளுக்கு ஏற்படுத்தப்பட்ட ஊறுகளுக்கு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட தொகையைக் கொண்ட நட்ட ஈடொன்றைச் செலுத்துமாறு கட்டளையிடவும் படலாம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 311 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 311 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

கடுங்காயம் 311 - பின்வரும் வகையினதான காயங்கள் மட்டுமே "கடுமையானவை" யாக குறித்துரைக்கப்படுகின்றன.

(அ) ஆண்மையழித்தல்

(ஆ) இரு கண்களுள் ஒன்றில் நிரந்தரமான பார்வைச் சீர்குலைவு அல்லது பாதிப்பு

(இ) இரு செவிகளுள் ஒன்றில் நிரந்தரமான செவிப்புல சீர்குலைவு அல்லது பாதிப்பு

(ஈ) ஏதேனும் உறுப்பின் அல்லது மூட்டின் சீர்குலைவு

(உ) ஏதேனும் உறுப்பின் அல்லது மூட்டின் வலிமைகள் அழிக்கப்படல் அல்லது நிரந்தரப் பாதிப்பு

(ஊ) எலும்பு கசியிழையம் அல்லது பல்வெட்டப்படுதல் அல்லது முறிவு அல்லது எலும்பு மூட்டு அல்லது பல்லின் இடப்பெயர்வு அல்லது தளர்வு

(எ) உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய ஏதேனும் ஊறு அல்லது அந்த ஊறின் விளைவாக இருதய, வயிற்றில் அல்லது மண்டையோட்டு அறைகள் திறக்கப்படவேண்டிய சத்திரசிகிச்சையொன்று புரியப்படுகின்றதோ அந்த ஏதேனும் ஊறு.

(ஏ) காயப்பட்டவர்களுக்கு ஊறின் காரணமாக அல்லது ஊறினால் அவசியப்படுத்தப்பட்ட ஏதேனும் சத்திரசிகிச்சையால் இருபது நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு கடுமையான உடல் நோவை ஏற்படுத்துகின்ற அல்லது அவரது வழமையான அலுவல்களை செய்யமுடியாத நிலையை ஏற்படுத்துகின்ற ஏதேனும் ஊறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 360 அ என்னும் பிரிவு இத்தால்நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

360 (அ)(1) எத்தகைய வயதினராகிய ஆளெவரையும், அவர் ஆணாக இருந்தாலென்ன, பெண்ணாக இருந்தாலென்ன, அவர் இலங்கைக்குள் அல்லது வெளியே விலைமகன் ஒருவராக அல்லது விலைமகள் ஒருவராக அத்தகைய ஆளினுடைய சம்மதத்துடனோ அல்லது சம்மதமின்றியோ வருவதற்கு உதவிபுரியும் அல்லது உதவிபுரிய எத்தனிக்கின்ற :

(2) பதினாறு வயதுக்குக் குறைந்த ஆளெவரும், இலங்கைக்கு வெளியே எவரேனும் ஆளுடன் சட்டவிரோதமாக உடலுறவு கொள்வதற்கு அத்தகைய ஆளினுடைய சம்மதத்துடன் இருந்தாலும் சரி, சம்மதம் இல்லாமல் இருந்தாலும் சரி இலங்கையைவிட்டு வெளியே செல்வதற்கு உதவிபுரிகின்ற அல்லது உதவிபுரிய எத்தனிக்கின்ற அல்லது, சொல்லப்பட்ட நோக்கத்துக்காக அத்தகைய எவரேனும் ஆளை (அத்தகைய ஆளின் சம்மதத்துடன் இருந்தாலும் சரி சம்மதம் இல்லாமல் இருந்தாலும் சரி) இலங்கையிலிருந்து அகற்றிச் செல்கின்ற அல்லது அகற்றிச் செல்ல எத்தனிக்கின்ற

(3) எத்தகைய வயதினராகிய ஆளெவரையும் (அத்தகைய சம்மதத்துடனோ அல்லது சம்மதமில்லாமலோ வேறு எவராகிலுமுள்ள விபசாரவிடுதியொன்றில் அத்தகைய ஆள் உடனுறைபவராக வருவதற்கான அல்லது அத்தகைய ஆள் அத்தகைய விபசார விடுதிக்கு விஜயம் செய்வதற்கான முனைப்புடன் இலங்கையை விட்டுச் செல்ல உதவிபுரிகின்ற அல்லது உதவிபுரிய எத்தனிக்கின்ற அல்லது சொல்லப்பட்ட நோக்கத்துக்காக அத்தகைய ஆள் எவரையும் அவருடைய சம்மதத்துடனோ அல்லது சம்மதமின்றியோ இலங்கையிலிருந்து அகற்றிச் செல்கின்ற அல்லது அகற்றிச் செல்ல எத்தனிக்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) பதினாறு வயதுக்கு குறைந்த வயதுடைய ஆளெவரையும் அவர் இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியே வேறு எவரேனும் ஆணுடன் சட்டவிரோதமாக உடலுறவு கொள்ளும் நோக்கத்துடன் இலங்கைக்குள் கொண்டு வருகின்ற அல்லது கொண்டு வர எத்தனிக்கின்ற

(5) எத்தகைய வயதுடையவருமான ஆளெவரும் (அத்தகைய ஆளின் சம்மதத்துடனோ அல்லது சம்மதமின்றியோ) இலங்கையில் அத்தகைய ஆளின் வசிப்பிடத்தை விட்டு விபசார விடுதியொன்றல்லாத அத்தகைய இடமொன்றை) அத்தகைய ஆள் இலங்கைக்குள்ளோ அல்லது வெளியேயோ விபச்சாரம் செய்யும் நோக்கங்களுக்காக விபச்சாரவிடுதியொன்றில் உடனுறைபவராக வருவதற்கான அல்லது அவ்விடுதிக்கு விஜயம் செய்வதற்கான முனைப்புடன், வெளியே செல்வதற்கு உதவிபுரிகின்ற அல்லது உதவிபுரிய எத்தனிக்கின்ற

(6) ஆளெவரையும், அத்தகைய ஆளின் சம்மதமின்றி ஏதேனும் விபச்சார விடுதியில் சட்டவிரோதமான உடலுறவு கொள்ளும் நோக்குடன் தடுத்துவைக்கின்ற ஆளெவரும் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத, பத்தாண்டுகளை வரிஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் குற்றப்பணமொன்றுடனும் தண்டிக்கப்படலாம்.

8. பின்வரும் புதிய பிரிவுகள் 360 அ என்னும் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 360 ஆ அத்துடன் 360 இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்.

360 (1) கீழ்க்காணப்படும் செயல்களில் ஈடுபடுத்தும் அதாவது :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) ஏதேனும் குழந்தையை, அக்குழந்தையை பாலியல் துஷ்பிரயோகம் செய்விக்கின்ற அல்லது ஏதேனும்விதமான பாலியல் செயலில் அல்லது ஏதேனும் ஆபாசமான அல்லது இழிவான கண்காட்சியில் அல்லது காட்சியில் பங்குபற்றச் செய்விக்கின்ற நோக்கங்களுக்கென அக்குழந்தையை எவையேனும் வளவுகளுக்குள் பிரவேசிக்க அல்லது தங்கியிருக்க வேண்டுமென்றே அனுமதிக்கின்ற :

(ஆ) பாலியல் உடலுறவின் நோக்கங்களுக்கு அல்லது ஏதேனும் விதமான பாலியல் துஷ்பிரயோகத்திற்கு குழந்தையொன்றைக் கூட்டிவருவ்தாகச் செயற்படுகின்ற ;

(இ) அச்சுப் பிரதி அல்லது தொடர்புசாதனங்கள், வாய்மொழி விளம்பரங்கள் அல்லது அதே போன்ற வேறு வழிகள் மூலம் பாலியல் உறவுக்கு அல்லது ஏதேனும் விதமான பாலியல் துஷ்பிரயோகத்திற்கு குழந்தையொன்றின் வாடிக்கையாளர் ஒருவராக இருக்க ஆளொருவரைத் தூண்டிவிடுகின்ற ;

(ஈ) அத்தகைய குழந்தையை பாலியல் உடலுறவுக்கு அல்லது ஏதேனும் விதமான பாலியல் துஷ்பிரயோகத்திற்குக் கூட்டிவிடுவதற்கு அத்தகைய குழந்தைமேல் தமக்குள்ள செல்வாக்கை அல்லது அக்குழந்தையிடம் தமக்குள்ள செல்வாக்கை அல்லது அக்குழந்தையிடம் தமக்குள்ள உறவை அனுகூலமாகப் பயன்படுத்துகின்ற ;

(உ) ஒரு குழந்தையை பாலியல் உறவுக்கு அல்லது ஏதேனும் விதமான பாலியல் துஷ்பிரயோகத்திற்குக் கூட்டிவிடுவதற்காகஅக்குழந்தையை பயமுறுத்துவதன் மூலம் அல்லது அதன் மீது வன்முறையை உபயோகிக்கின்ற அல்லது:

(ஊ) ஒரு குழநற்தையை பாலியல் உடலுறவுக்கு அல்லது ஏதேனும் விதமான பாலியல் துஷ்பிரயோகத்திற்கு கூட்டிவிடும் முனைப்புடன் அத்தகைய குழந்தைக்கு அல்லது அதன் பெற்றோர்களுக்குப் பணம், பொருட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது வேறு நன்மை கொடுக்கின்ற ;

(1) ஆளெவரும் குழந்தை விபச்சாரத் தவறு புரிகிறார் என்பதுடன், அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமான காலப்பகுதியொன்றிற்கான இருவகையிலொருவகை மறியற்தண்டனையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் குற்றப்பணத்துடனும் தண்டிக்கப்படலாம்.

"குழந்தைகளை முறையற்ற பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு ஈடுபடுத்துதல்"

(2) இப்பிரிவில் "குழந்தை" என்பது 18 வயதுக்குக் குறைந்த ஆளொருவர் எனப் பொருள்படும்.

360 இ (1) கீழ்க்குறிப்பிடும் ஏதேனும் செயல்களில் ஈடுபடல் அதாவது

(அ) பணத்திற்காக அல்லது வேறு ஏதேனும் கைம்மாற்றிற்காக குழந்தையை வாங்குகின்ற விற்பனை செய்கின்ற அல்லது பண்டமாற்றுச் செய்கின்ற செயலில் ஈடுபடுகின்ற ;

(ஆ) பணத்திற்காக அல்லது வேறு ஏதேனும் மைம்மாறிற்றாக கொள்வனவு செய்யப்படுவதை, விற்பனை செய்யப்படுவதை அல்லது பண்டமாற்றுச் செய்யப்படுவதை அல்லது எவரேனும் ஆளின் சுவீகாரத்தில் வைக்கப்படுவதை ஊக்குவிக்கும் வசதியளிக்கும் அல்லது தூண்டிவிடும் நோக்கத்திற்காக ------

(i) குழந்தையொன்று அதன் பெற்றோரின் அல்லது சட்டபூர்வமான பாதுகாவலரின் சம்மதமின்றி வெளிநாடொன்றிற்கு பிரயாணம் செய்வதற்கு ஏற்பாடு செய்கின்ற அல்லது துணைபுரிகின்ற : அல்லது

(ii) கர்ப்பம் தரித்திருக்கும் பெண் ஒருவரிடமிருந்து அத்தகைய பெண்ணின் இன்னமும் பிறக்காத குழந்தையை, பணத்துக்காக அல்லது வேறு கைமாறுக்காக அல்லது மகப்பேற்பு செய்வதற்காக சம்மதமளிக்கும் சத்திய கடதாசியொன்றைப் பெறுகின்ற,

(iii) குழந்தை பெறவதற்காக பெண்களை அல்லது ஆண் பெண் ஜோடிகளைத் திரட்டுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv) பிறப்புகள் பதிவு சம்பந்தப்பட்ட ஆள் ஒரவராக இருந்துகொண்டு ஏதேனும் பிறப்புப் பதிவேட்டை அல்லது பிறப்பு இடாப்பில் தெரிந்துகொண்டே பொய் புனைதலை அனுமதிக்கின்ற

(v) பணத்திற்காக அல்லது வேறு கைம்மாறிற்காக ஆஸ்பத்திரிகளில் இருந்து, பெண்கள் புகலிடங்களில் இருந்து, சிகிச்சை நிலையங்களில் இருந்து, பகற் பொழுது கவனிப்பு நிலையங்களிலிருந்து அல்லது வேறு குழந்தை கவனிப்பு நிலையங்களிலிருந்து அல்லது நலன்புரி நிலையங்களிலிருந்து குழந்தைகளைப் பெறுவதில் ஈடுபடுகின்ற தாயை அல்லது வேறு எவரேனும் ஆளை மிரட்டுவதன் மூலம் அத்தகைய ஏதேனும் நிறுவனத்திலிருந்து அல்லது நிலையத்திலிருந்து மகப்பேற்றுக்காக குழந்தையொன்றைப் பெறுகின்ற

(vi) தாயை ஆள்மாறாட்டம் செய்கின்ற அல்லது அத்தகைய ஆள்மாறாட்டத்துக்கு உதவி செய்கின்ற ஆளெவரும், குழந்தை வியாபாரம் என்னும் தவறைப் புரிகிறார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப் பகுதிக் கு இருவகையிலொருவகை மறியற்றண்டனையுடன் தண்டிக்கப்படவேண்டும் என்பதுடன், குற்றப்பணத்துடனும் தண்டிக்கப்படலாம். அத்துடன் தவறானது குழந்தையின் தொடர்பில் புரியப்படுமிடத்து ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனையுடன் தண்டிக்கப்படல் வேண்டும் என்பதுடன் குற்றப்பணத்துடனும் தண்டிக்கப்படலாம்.

இப்பிரிவில் "பிள்ளை" என்பது 18 வயதிற்குக் குறைந்த ஆளொருவர் என்று பொருளாகும்.

19 - முதன்மைச் சட்டவாக்கத்தின் 365 அ என்னும் பிரிவை உடனெடுத்து பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 365 ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்.

365 ஆ (1) பாலியல் அவா நிறைவுக்காக அவரது பிறப்புறுப்பை அல்லது மனித உடம்பில் வேறு ஏதேனும் பாகத்தை அல்லது ஏதேனும் சாதனத்தை வேறு ஏதேனும் ஆளின் ஏதேனும் துவாரத்தில் அல்லது உடம்பில் ஏதேனும் பாகத்தில் பயன்படுத்தி பின்வரும் விவரணங்களில் கீழ்வரும் ஏதேனும் சந்தர்ப்பங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது ---------------:-

(அ) மற்ற ஆளின் சம்மதமில்லாமல்,

(ஆ) மற்ற ஆளின் சம்மதத்துடன் அல்லது பலாத்காரத்தை, அச்சுறுத்தலை அல்லது மிரட்டலைப் பயன்படுத்தி அல்லது அத்தகைய வேறு ஆளை மரண பயத்துக்கோ அல்லது ஊறுக்கோ உட்படுத்தி அல்லது அத்தகைய வேறு ஆள் சட்டவிரோதமான தடுப்புக் காவலில் இருந்தபோது அத்தகைய சம்மதம் பெறப்பட்டுள்ள விடத்து;

(இ) மற்ற ஆளின் சம்மதத்துடன் அல்லது மற்ற சித்த சுவாதீனமற்றிருந்த நேரத்தில் அல்லது மதுசாரத்தினால் அல்லது போதைப்பொருளினால் தூண்டிவிடப்பட்ட வெளிநிலையிலிருந்தபோது அத்தகைய சம்மதம் பெறப்பட்டுள்ளவிடத்து

363 ஆம் பிரிவின் கீழ் கற்பழிப்பாக அமையாத செயலொன்றான ஏதேனும் செயலைப் புரிகின்ற ஆளொருவராலும் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகத்தைப் புரிகின்றார்.

(அ) பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகத்தைப் புரிகின்ற ஆளெவரும் நான்கு ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு விஞ்சாததுமான ஒரு காலப்பகுதிக்கு கடூழிய மறியற்றண்டனையுடனும் அத்துடன் குற்றப்பணத்துடனும் தண்டிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட தொகையொன்றின் இழப்பீடொன்றை அத்தகைய ஆளுக்குச் செலுத்துமாறு கட்டளையிடப்படுதலும் வேண்டும்.

(ஆ) 18 வயதுக்குக் குறைந்த எவரேனும் ஆளின் மீது பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் புரியும் ஆளெவரும் பத்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலப்பகுதிக்கு கடூழியச் சிறைத்தண்டனையுடனும் அத்துடன் குற்றப்பணத்துடனும் தண்டிக்கப்படுதல் வேண்டும். "அத்துடன் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட தொகையொன்றின் இழப்பீடு ஒன்றை அத்தகைய ஆளுக்குச் செலுத்துமாறு கட்டளையிடப்படுதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

# 1988 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க

# தண்டனைச் சட்டக்கோவை

# திருத்தச்சட்டம்

(1998,யூனி மாதம் 4 ம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

1995 யூனி மாதம் 5 ஆம் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப்பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1998 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச் சட்டம்)

(1998 யூன் மாதம் 4 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.

01. இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க தண்டனைச்சட்டக்கோவை (திருத்தச் சட்டம்) என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

02. (இதன்பின்பு "பிரதான சட்டவாக்கம்" எனக் குறிப்பிடப்படும் 19ஆகச் செய்யப்படும்) தண்டனைச் சட்டக்கோவையின் 286 (அ) ஆம் பிரிவை கீழ்க்காணும் விதத்தில் இத்தால் திருத்தஞ் செய்யப்படுகிறது. 19 ஆம் அதிகாரத்தின் 286 (அ) ஆம் பிரிவு திருத்தம் செய்தல்

(1) அந்தப் பிரிவின் (2) ஆம் உபபிரிவை அந்தப் பிரிவின் (4) ஆம் உப பிரிவு என மீண்டும் இலக்கமிடுவதாலும், மற்றும்

(2) அந்தப் பிரிவின் (1) ஆம் உப பிரிவுக்கு அடுத்ததாக கீழ்க் காணும் புதிய உப பிரிவுகளை சேர்த்துக்கொள்வதாலும் (2) புகைப்படங்களையும் நிழற்படச்சுருளையும் விரிவுபடுத்தும் ஒருவருக்கு சிறுவனொருவனின் நடத்தைகெட்ட, ஒழுக்கக்கேடான புகைப்படம் அல்லது நிழற்படச்சுருள் விர்வுபடுதத்துவதற்கு அவரிடம் கொடுக்கப்பட்டிருக்குமாயின் இதுபற்றி அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு அறிவிக்க வேண்டும்.

(3) (2) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செயற்படுகின்ற புகைப்படங்கள் / நிழற்படச்சுருளை விரிவுபடுத்துபவர் ஆகிய யாராவதொருவர், இரு வருட நீடிப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திற்கு இரண்டு விதத்திலிருந்து ஒரு விதத்தில் சிறைத்தண்டனையை அனுபவிப்பதற்கும் அல்லது தண்டப் பணத்தைச் செலுத்துவதற்கும் அல்லது இரண்டையும் தண்டனையாகப் பெறக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

(3) கீழே காணப்படும் புதிய பிரிவுகள் (287) ஆகிய பிரிவுக்கு உடனடியாக இத்தால் உள்ளடக்கப்படுவதுடன் அவைகள் பிரதான சட்டவாக்கத்தின் முறையே, 288, 288 (அ) மற்றும் 288 (ஆ) பிரிவுகளாக செயலூக்கம் உடையதாக இருக்கும்.

பிரதான சட்டவாக்கத்தின் 228, 228 (அ) மற்றும் மற்றும் 228 (ஆ) புதிய பிரிவுகளை உள்ளடக்குதல்

சிறுவர்களை பிச்சையெடுப்பதற்கு ஒழுங்குபடுத்துதல் அல்லது அதற்காக தரகர் வேலைபார்த்தல், (கூட்டிக்கொடுத்தல்)

288 (1) பிச்சையெடுத்தல் தானம் பெறுதல், அல்லது தானம் கொடுப்பதற்கு தூண்டுதலாகிய கருமங்களுக்காக (பாட்டுப்பாடுதல், விளையாடுதல், நாட்டியம் ஆடுதல், சில பொருட்களை விற்பனை செய்வதற்கு அல்லது வேறு விதத்தில் பொய் உள்ளதும், அற்றதுமான) ஏதாவது ஒரு வீதியில், இடத்தில் அல்லது ஓரிடத்தில் இருப்பதற்கு ஓர் சிறுவனை ஒழுங்குசெய்யும் அல்லது கூட்டிக்கொடுக்கும் எந்த ஒரு நபரும் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து ஐந்து வருடங்களுக்குக் குறையாத காலத்துக்கு இருவிதத்தில் ஒருவிதத்தில் சிறைத்தண்டனையைப் பெற்றுக் கொள்வதுடன் குற்றப்பணம் செலுத்துவதற்கும் உட்படுத்தப்படுபவராவார்.

(2) இப்பிரிவில் சிறுவர் என்பது 18 வயதுக்குக் குறையாத நபர் ஒருவரைக் குறிக்கும்

288

பாலியல் உறவுக்காக கூட்டிக்கொடுப்பவராக செயற்படுவதற்கு சிறுவர்களை கூலிக்கு அமர்த்துதல் அல்லது சேவையில் ஈடுபடுத்தல்

(அ) (1) சட்டவிரோதமான முறையில் பாலியல் உறவுக்காக யாராவதொருவர் கூட்டிக்கொடுப்பதற்கு அறிந்துகொண்டு சிறுவர் ஒருவரை கூலிக்கு அமர்த்தும், வேலையில் ஈடுபடுத்தும், விருப்பத்துக்குட்படுத்தல், ஈடுபடுத்தல், தூண்டுதல் அல்லது அந்தச் சிறுவரை பலாத்காரப்படுத்தும் நபரொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து 2 வருடத்துக்குக் குறையாததும், ஐந்து வருடத்துக்கு விஞ்சாத காலத்துக்கு இருவிதத்தில் ஒருவிதத்திலாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைத்தண்டனையைப் பெறுவதற்குள்ளாக்கப்படுவதுடன் தண்டப் பணம் செலுத்தப்படுவதற்கும் உட்படுத்தப்படுவாராவார்.

(2) இப்பிரிவின் சிறுவர் என்பது 18 வயதுக்குக் குறையாத நபர் ஒருவரைக் குறிக்கும்.

வரையறை செய்யப்பட்ட பொருட்களை வியாபாரம் செய்வதற்கு சிறுவர்களைக் கூலிக்கு அமர்த்துதல் அல்லது சேவையில் ஈடுபடுத்துதல்

228 (ஆ) (1) ஏதாவது வரையறை செய்யப்பட்ட பொருட்களை வியாபாரம் செய்வதற்கு தெரிந்துகொண்டே சிறுவரை வாடகைக்கு மர்த்துதல் சேவையில் ஈடுபடுத்துதல் விருப்பம் உண்டாக்கச் செய்தல், தூண்டுகிற ஈடுபடுத்துகின்ற அந்தச் சிறுவனை பலவந்தப்படுத்தும் எந்தவொரு நபரும் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து ஏழு வருடத்துக்குக் குறையாததும் பத்து வருடத்துக்கு விஞ்சாத விதத்தில் ஒரு விதத்திலாவது சிறைத் தண்டனையைப் பெறுவதற்கு உள்ளாக்கப்படுவதுடன் தண்டப்பணம் செலுத்துவதற்கும் உட்பட்டவராவார்.

(2) இந்தப்பிரிவில்

"சிறுவன்" என்பது பதினெட்டு வயதிற்கு குறையாத நபரொருவரைக் குறிக்கும்.
வரையறைகக்ட்பட்ட பொருட்கள்" என்பது (218 ஆம் அத்தியாயத்தில்) விஷப்பொருட்கள், அபின், அபாயத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துப்பொருட்கள் கட்டளைச்சட்டத்தில் அதற்கு வழங்கப்பட்டுள்ள அர்த்தத்தையே கொண்டிருக்கும்.
"வியாபாரம் செய்தல்" என்பதற்கு விற்றல், கொடுத்தல், கூட்டிக் கொடுத்தல், சேகரித்து வைத்தல், கொண்டு செல்லல், அனுப்புதல் ஒப்புக் கொடுத்தல், அல்லது வினியோகித்தல் ஆகியவை உள்ளடங்கும்.

4. பிரதான சட்டவாக்கத்தின் 302 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகிறது.

5. பிரதான சட்டவாக்கத்தின் 360 9அ) பிரிவு கீழ்க்காணும்விதத்தில் இத்தால் திருத்தம் செய்யப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) அந்தப் பிரிவு (5) ஆம் உபபிரிவின் ஆரம்பத்திலிருந்து "பழக்கப்பட்ட வாசஸ்தானம்" என்ற சொல்வரையிலிலான சகல சொற்களுக்கும் பதிலாக கீழ்க் காணப்படும் சொற்களை அதற்கு பதிலாகச் சேர்த்துக் கொள்ளல்

"இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே சட்டவிரோதமான முறையில் பாலியல் உறவுகளை நடாத்தும் எண்ணத்துடன் இலங்கையில் அந்த நபரின் பழக்கப்பட்ட வாசஸ்தானம் என்னும் சொல் சேர்த்துக் கொள்ளல்.

(2) அந்தப் பிரிவின் (6) ஆம் உபபிரிவில் "அந்த நபருடைய விருப்பமின்றி ஏதாவதொரு விலைமாதர் தொழில்நடத்தும் வீட்டில் தடுத்து வைக்கும் என்ற சொற்களுக்குப் பதிலாக "அந்த நபருடைய விருப்பமின்றி ஏதாவதொரு இடத்தில் தடுத்து வைக்கும்" என்ற சொற்களைச் சேர்த்துக்கொள்ளல்.

6. பிரதான சட்டவாக்கத்தின் (363) புதிய பிரிவின் (ஆ) பந்தியை நீக்கி அதற்குப் பதிலாக கீழ்க் காட்டப்பட்ட பிரிவை உட்சேர்ப்பதன் மூலம் அந்தப்பிரிவு இத்தால் திருத்தப்படுகிறது.

(ஆ) பலாத்காரத்தைப் பாவித்து அல்லது அச்சுறுத்தி அல்லது தடுத்து வைத்திருத்தலுக்காக அச்சுறுத்தி அல்லது அவளுக்கு மரணபயத்தை ஏற்படுத்தி அல்லது காயம் விளைவிப்பேன் என அச்சுறுத்தி அல்லது அவளை சட்டபூர்வமாக அல்லது சட்டவிரோதமாக தடுத்து வைத்து இருக்கையில் அல்லது அவளின் விருப்பத்துடன்:

7. பிரதான சட்டவாக்கத்தின் 365 (ஆ) பிரிவு கீழ்க்காணும் விதத்தில் இத்தால் திருத்தம் செய்யப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) அந்தப் பிரிவின் (அ) பந்திக்கு அடுத்துவரும் கீழ்க் காணப்படும் புதிய பந்தியைச் சேர்த்தல்

(அ) "மற்றைய நபர் 18 வயதிற்கு குறைந்த நபராக இருக்கையில் அந்த நபருடைய விருப்பத்துடன் அல்லது விருப்பமின்றி மற்றும்

(2) அந்தப் பிரிவின் (ஆ) பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழ்க்காணும் பந்தியை சேர்த்துக் கொள்ளல்.

(ஆ) அந்த மற்றைய நபர் சட்டபூர்வமாக அல்லது சட்டவிரோதமாக தடுத்துவைத்திருக்கையில் பலாத்காரத்தைப் பாவித்து அல்லது பயப்படுத்தி, அல்லது தடுத்து வைத்திருப்பேன் என அச்சுறுத்தி அல்லது அந்த மற்றைய நபரை மரணபயத்துக்குள்ளாக்கி அல்லது காயம் விளைவிப்பதாக அச்சுறுத்தி விருப்பத்தைப் பெற்றுள்ள சந்தர்ப்பத்தில் அப்படி பெற்றுக்கொண்ட விருப்பத்துடன்

8. இந்தச் சட்டத்தில் சிங்கள மொழி உரைக்கும் தமிழ் மொழி உரைக்குமிடையில் முரண்பாடு ஏற்படுவதாயின் சிங்கள மொழியின் உரையே வழக்கத்திற்கு எடுக்கப்படும்.

முரண்பாடு ஏற்படுமாயின் சிங்கள மொழி உரையே வழக்கத்தல் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீதி நியாயத்தைச் சமமாக அணுகும் கருத்திட்டம்**
**கருத்திட்டப் பதவிநிலை உத்தியோகத்தர்கள்**
**(2007 ஜனவரி மாதம்)**

1. திருமதி . மல்காந்தி விக்கிரமசிங்க
தேசிய கருத்திட்டப் பணிப்பாளர்
செயலாளர்
அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு.
தொலைபேசி :- 011-2375385

2. திருமதி. விவேகா சிறீவர்தன டீ சில்வா
தேசியக் கருத்திட்ட இணைப்பாளர்
தொலைபேசி :- 011-2375290

3. திருமதி. கீதா தாஸ்வத்த
காரியாலய முகாமையாளர்
தொலைபேசி :- 011-2375287/ 2375546/ 2375547
நீடிப்பு - 10

4. செல்வி சுனாரா சம்சுதீன்
கருத்திட்ட உத்தியோகத்தர்
தொலைபேசி :- 011-2375287/ 2375546 / 2375547-
நீடிப்பு - 11

5. திருமதி ஸாமிளா பெரேரா
கருத்திட்ட உத்தியோகத்தர்
தொலைபேசி :- 011-2375287/ 2375546 / 2375547-
நீடிப்பு - 12

6. திரு. சாறுக்க சமரசேகர
கருத்திட்ட உத்தியோகத்தர்
தொலைபேசி :- 011-2375287/ 2375546 / 2375547-
நீடிப்பு - 14

7. திருமதி கமா தயாரத்ன
நிதி முகாமையாளர்
தொலைபேசி :- 011-2375287/ 2375546 / 2375547-
நீடிப்பு - 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. திருமதி நிசாந்தி பர்ணடெற்
உதவிக் கணக்காளர்
தொலைபேசி :- 011-2375287/ 2375546 / 2375547-
நீடிப்பு - 16

9. திரு ஏ்.டபிள்யு. ஏ. கலப்பத்தி
பலவின காரியாலய உதவியாளர்

10. திரு. வீ.எல்.லியனகே
பலவின காரியாலய உதவியாளர்

11. திரு நளின் சஞ்சீவ விக்கிரமகே
காரியலாய உதவியாளர்

கருத்திட்ட தலைமை அலுவலகத்தின் விலாசம்

நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டம்

4 ஆம் மாடி,
இலக்கம் 310 காலி வீதி
கொழும்பு - 03.

தொலைநகல் :- 011-2375288

அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் அனுசரணையுடன் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு

நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டம
4 ஆம் மாடி,
இலக்கம் 310 காலி வீதி
கொழும்பு - 03.

தொலைபேசி :-011-2375287/ 011-2375546 / 011-2365547

இலவசக விநியோகிப்பதற்கு
அச்சுடப்பட்டது

ISBN-955-1258-05-03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org